Registered as a Newspaper | பக்கங்கள் 16 | விலை ரூ. 50

புதன் பொய்கை

# உதயன்

சுடர் : 38
கதிர் : 354

புதன்கிழமை 15 நவம்பர் 2023

ஐப்பசி 29 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# பொருளாதார நெருக்கடி; ராஜபக்சக்களே காரணம்!

## உயர்நீதிமன்றம் பரபரப்புத் தீர்ப்பு

**கொழும்பு, நவம்பர் 15**

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு, முன்னாள் ஜனாதிபதிகளான கோத்தாபய, மஹிந்த ராஜபக்ச, முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச உள்ளிட்ட பெரமுன அரசாங்கத்தினரும், முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநரும் காரணம் என்று உயர் நீதிமன்றம் நேற்றுப் பரபரப்புத் தீர்ப்பளித்துள்ளது.

»15

விரிவுகள்:- பக் - 15 இல்

## கனவுலக 'பட்ஜெட்'

ஜே.வி.பி. கடும் பிடி

## பாதீட்டை ஆதரிக்க ஐ.ம.ச. தயார்நிலை?

குழப்புகிறாராம் சஜித்
ஷெகான் கண்டுபிடிப்பு

## 2024 பாதீட்டுக்கு பெரமுன ஆதரவு

## தேவைப்படுவது நிதியல்ல நீதி!

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் திட்டவட்டம்

## இளைஞன் சாவு!

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ்ப்பாணத்தில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த, குருநகர் பகுதியைச் சேர்ந்த திரு »15

யாழ்ப்பாணத்தில்

## தொடர் மழையால் 8 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கனமழை காரணமாக, எட்டுக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட இடர்முகாமைத்துவப் பிரிவின் தலைவர் ரி.என். சூரியா தெரிவித்துள்ளார். »15



## துப்பாக்கி ரவைகள் நெடுந்தீவில் மீட்பு!

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ்ப்பாணம் - நெடுந்தீவுப் பகுதியில் ஒரு தொகுதி »15

## மூளைக் காய்ச்சலால் கிராமஅலுவலர் பலி!

யாழ்ப்பாணம், நவ. 15

கிராமஅலுவலர் ஒருவர் மூளைக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளார். உடுப்பிட்டி »15

13 வயதான சிறுமிக்கு

## சட்டவிரோதக் கருக்கலைப்பு முல்லைத்தீவில் மூவர்கைது

முல்லைத்தீவு, நவ. 15

முல்லைத்தீவு, குமுழமுனைப்பகுதியில் சட்டவிரோதக் கருக்கலைப்புச் செய்த குற்றச்சாட்டில் முல்லைத்தீவில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:- »15

## 93 குளங்கள் வவுனியாவில் வான்பாய்வு!

வவுனியா, நவ. 15

வவுனியாவில் 93 குளங்கள் வான் பாய்வதுடன், »15

## உருக்குலைந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு!

வவுனியா, நவ. 15

வவுனியா, தரணிக்குளம் பகுதியில் உருக்குலைந்த நிலையில் பெண்ணொருவரின் சடல »15




Digitized by Noolaham Foundation

# தேர்தல் வெற்றிக்காக தயாரிக்கப்பட்ட பட்ஜெட்

## ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.15

2024 ஆம் ஆண்டு ஏப்ரல், ஒக்ரோபர் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என்பதை ஜனாதிபதி வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக உறுதிப்படுத்தியுள்ளார். தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டே வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:-

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் ஜனாதிபதி வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளார் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் சமூகக் கட்டமைப்பில்காணப்படும்அடிப்படைப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் வரவு - செலவுத் திட்டம் அமையவில்லை. 2024 ஆம் ஆண்டு தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டு வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளமை தெளிவாக வெளிப்படுகிறது.

அடுத்த ஆண்டு ஏப்ரல் முதல் ஒக்ரோபர் மாதம் வரையிலான காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என்பதை ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார்.

அரச சேவையாளர்களுக்கு 10 ஆயிரம் ரூபாவால் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கிறோம். அரச துறையை காட்டிலும் பல இலட்சம் பேர் தனியார் துறையில் சேவையாற்றுகிறார்கள். தனியார் துறை தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படவில்லை. அதைப் பிரதான குறைபாடாக கருதவேண்டும்.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக அதிகரிக்கப்பட்டுள்ள வரி தொடர்பில் அவர் தெளிவுபடுத்தவில்லை. மறுபுறம் சமூகப் பாதுகாப்பு அறவீட்டுத் தொகைக்காக வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரச வருமானத்துக்கும் அரச செலவினத்துக்கும் இடையில் காணப்படும் பற்றாக்குறையை முகாமைத்துவம் செய்யும் திட்டங்கள் முன்வைக்கப்படவில்லை - என்றார். (எ-இ)

# டயானாவுக்கு மகிழ்ச்சி

மதுபானக் கடைகள் மற்றும் மதுபானசாலைகள் அதிக நேரம் திறந்திருக்கும் முறைமையை அறிமுகப்படுத்துவதற்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே வரவேற்றுள்ளார்.

கொழும்பு, ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள அவர், இந்த முன்மொழிவு தொடர்பாக நான் மகிழ்ச்சியடைகிறேன். இலங்கையில் சட்டவிரோதமான மதுபான விற்பனையை நிறுத்துவதற்கான நடைமுறை இருக்கவேண்டும். மதுபானக் கடைகள் மற்றும் மதுபானசாலைகள் 24 மணி நேரமும் திறந்திருக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# நெருக்கடிக்குள் தள்ளும் வரவு - செலவுத் திட்டம்



## ஜே.வி.பி. விமர்சனம்

**கொழும்பு, நவ.15**

**2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட முன்மொழிவானது கடனைப் பெறுதல் மற்றும் அரச சொத்துகளை விற்பனை செய்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது என தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட முன்மொழிவு நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போது தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட முன்மொழிவு மூலம் நாட்டை மேலும் நெருக்கடிக்குள் தள்ளுவதை அரசாங்கம் தொடர்ந்தும் மேற்கொண்டுள்ளது.

ஆரம்பத்தில் முன்மொழியப்பட்ட தொகையை விட மேலும் 3 ஆயிரத்து 400 பில்லியன் ரூபாவால் கடன் பெற்றுக்கொள்ளும் வரம்பை அரசாங்கம் அதிகரித்துள்ளது. நாட்டில் நிலவும் நெருக்கடிக்கு புதிய தீர்வுகளை வழங்குவதற்குப் பதிலாக, ஜனாதிபதி மற்றும் அவரது அரசாங்கம் தமது பழைய மற்றும் தோல்வியுற்ற நடவடிக்கைகளை மீண்டும் முன்மொழிந்துள்ளது - என்றார். (எ-இ)

# மக்களை ஏமாற்றும் வரவு - செலவுத் திட்டம்

## ஹரிணி எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.15

நாட்டு மக்களை ஏமாற்றும் பிறிதொரு செயற்பாடாகவே 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் காணப்படுகிறது. நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் எவ்விதப் பரிந்துரைகளும் முன்வைக்கப்படவில்லை.

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தவறுகளைத் திருத்திக் கொண்டு முன்னேறிச் செல்ல வேண்டும் என்று குறிப்பிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார். 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட சமர்ப்பிப்பின்போது இந்தக் கருத்தையே குறிப்பிட்டார். ஆனால் எந்தத் தவறும் திருத்திக் கொள்ளப்படவில்லை. வரையறையற்ற கடன்களால் நாடு வங்குரோத்து நிலையையடைந்தது என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.

ஆனால் கடன்படு எல்லையை 3 ஆயிரத்து 400 பில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளார். ஆகவே இந்த வரவு - செலவுத் திட்டம் நடைமுறைக்கு ஒரு போதும் சாத்தியமாகாது - என்றார். (எ-இ)

# நடைமுறைச் சாத்தியமற்ற வரவு - செலவுத் திட்டம்!

## முஸ்லிம் காங்கிரஸ் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ.15

வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி பல யோசனைகளை முன் வைத்துள்ளார். ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்த முடியுமா? என்பதே எமது கேள்வியாக உள்ளது - இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த வருடம் அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்ட யோசனைகளில் 90 வீதமானவை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை நாம் அறிவோம். அதேபோன்று அரசாங்கத்தால் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டு வரும் கடன் மறுசீரமைப்பு இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதை நடைமுறைப்படுத்தாமல் வேறு எதையும் முன்னெடுக்க முடியாது. வரவு - செலவுத்திட்டத்தின் ஊடாக ஜனாதிபதி சிறந்த விடயங்களை நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். எனினும் அரசாங்கத்தால் அவற்றை நடைமுறைப்படுத்த முடியுமா? என்பதே கேள்வியாக உள்ளது - என்றார். (எ-இ)

# கருத்துச் சொல்ல மறுத்த மஹிந்த!

கொழும்பு, நவ.15

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்க முன்னாள் ஜனாதிபதியும், பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ச மறுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவால் சமர்ப்பிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் தொடர்பில் மஹிந்த ராஜபக்சவிடம் ஊடகவியலாளர்கள் கருத்துக் கேட்டபோதே உடனடியாக எப்படிக் கருத்துக்கூறுவது? என அவர் பதிலளித்துள்ளார். தொடர்ந்தும் இது தொடர்பில் அவரிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போது, நான் வரவு - செலவுத்திட்ட அறிக்கையை முழுமையாக இன்னும் படிக்கவில்லை. அதனால் உடனடியாக என்னிடம் கேட்டால் நான் எப்படி கருத்துக் கூற முடியும்? இது தொடர்பாக நன்கு அறிந்தவர்களிடம் கேளுங்கள். நான் படித்த பின்னர் கூறுகின்றேன். அரச ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இது நல்ல விடயம் என்று பதிலளித்தார். (எ-இ)

# கடந்த பட்ஜெட்டில் உள்ளவையே மீண்டும் முன்வைக்கப்பட்டுள்ளன

## நாமல் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ.15

தற்போதைய வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட பல விடயங்கள் கடந்த முறை வரவு - செலவுத் திட்டத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணைகளே என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பல விடயங்களை கடந்த வரவு - செலவுத் திட்டத்திலும் அவர் முன்வைத்துள்ளார்.

அவை நிறைவேற்றப்படவில்லை எனத் தெரிகிறது. அதனால் மீண்டும் முன்வைத்துள்ளார்.

ஒரே விடயம் இரண்டு முறை கூறப்படுகிறதெனின், அந்த விடயம் அடிமட்ட அளவில் நடைமுறையில் நிறைவேற்றப்பட்டதா? இல்லையா? என்றகேள்வி எங்களுக்கு உள்ளது. தற்போதைய வரவு - செலவுத் திட்டமும் அதுபோன்ற பேச்சுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டமாக இருக்குமா என்பது தொடர்பில் காத்திருக்கிறோம்.

எதிர்வரும் காலங்களில் இதை ஆய்வு செய்து, நாடாளுமன்ற விவாதத்தில் எங்களது யோசனைகளை முன்வைப்போம்.

ஜனாதிபதி ஏற்றுக்கொள்வாரா என்பதைப் பார்ப்போம்.

மொட்டுக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் நிதியமைச்சராக அவர் உள்ளார். அப்படியானால், வரவு - செலவுத் திட்டங்களில் எங்கள் கொள்கைகள் இருக்கவேண்டும் - என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை ஏற்படுத்தாத வரவு - செலவுத் திட்டம்

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ.15

**வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு 2024 ஆம் ஆண்டு வரவு -செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை காட்டிலும் பல முன்மொழிவுகள் கடந்த காலங்களிலும் முன்வைக்கப்பட்டன. ஆனால் எவையும் செயற்படுத்தப்படவில்லை - இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகளையே 2025 ஆம் ஆண்டும் முன்வைப்பார்கள். எவற்றையும் செயற்படுத்த மாட்டார்கள். வழமையான அறிக்கையாகவே 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஜனாதிபதியால் சபையில் வாசிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு மற்றும் இந்த ஆண்டு முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் இந்த முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் முன்மொழிவுகள் எவையும் செயற்படுத்தப்படவில்லை. நாட்டு மக்கள் பொருளாதாரப் பாதிப்பால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். வரவு - செலவுத் திட்டத்தில் வரி அதிகரிப்பதும், சொற்ப அளவில் சம்பளம் அதிகரிப்பதாலும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. எதிர்காலத்தின் மீது நம்பிக்கை கொள்ளும் வகையில் வரவு - செலவுத் திட்டம் அமையவில்லை.

மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை விடுத்து இறந்த காலத்தை அடியொற்றியதாக சகல முன்மொழிவுகளும் காணப்படுகின்றன - என்றார். (எ-இ)

### இந்தியப் பேச்சாளர் சிறப்புரை யாழில்

இந்தியாவின் பிரபல நகைச்சுவைப் பேச்சாளர் மோகனசுந்தரத்தின் சிறப்புரை நிகழ்வு யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் 'நல்லதோர் குடும்பம்' என்ற தலைப்பின் கீழ் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு இந்தச் சிறப்புரை இடம்பெறவுள்ளது. இதற்கான அனுமதி இலவசம் என்றும் அனைவரும் பங்கேற்று பயனடையலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-27)

### இராஜ கோபுர அடிக்கல் நடல்

யாழ்ப்பாணம் - கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் தெற்கு வாயில் அம்பாள் சந்நிதானத்துக்கு பஞ்சதள இராஜகோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. (ச-159)

### மின்கட்டண திருத்தத்தில் மக்களுக்கு நிவாரணம்!

#### மின்சாரசபை தெரிவிப்பு

கொழும்பு, நவ.15

அடுத்த மின் கட்டணத் திருத்தத்தில் மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியும் என்று இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் மழையுடனான காலநிலையால் நீர் மின் உற்பத்தி அதிகரித்துள்ளது. இந்த நிலைமை தொடரும் பட்சத்தில் மக்களுக்கு நிவாரணம் வழங்கமுடியும் என்று மின்சாரசபையின் ஊடகப் பேச்சாளர் பொறியியலாளர் நோயல் பிரியந்த தெரிவித்தார்.

தற்போது தேசிய மின் உற்பத்தியில் 52 சதவீதம் நீர் மின் உற்பத்தி மூலம் பெறப்படுகின்றது. மின் உற்பத்தி நிலையங்களைச் சூழவுள்ள பகுதியில் தற்போதும் மழை வீழ்ச்சி கிடைக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

### நீரிழிவு விழிப்புணர்வு கலாசாலையில் இன்று

யாழ்ப்பாணம், நவ. 15

உலக நீரிழிவு தின விழிப்பூட்டல் செயலமர்வு கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் இன்று புதன்கிழமை காலை 8 மணி முதல் 12 மணிவரை நடைபெறவுள்ளது. நீரிழிவு பற்றிய அறிமுக உரையை யாழ். நீரிழிவுக் கழகத் தலைவர் தி.மைக்கல் ஆற்றவுள்ளார்.

தொடர்ந்து ' நீரிழிவால் கண்ணில் ஏற்படும் பாதிப்புகளும் தீர்வுகளும்' எனும் தலைப்பில் கண் சத்திர சிகிச்சை நிபுணர், மருத்துவர் எம். மலரவன், 'நீரிழிவால் நரம்புத் தொகுதி பாதிப்பும் தீர்வுகளும்' எனும் தலைப்பில் நரம்பியல் நிபுணர் மருத்துவர் கே. அஜந்தா, 'நீரிழிவால் சிறுநீரகப் பாதிப்பும் தீர்வுகளும்' எனும் தலைப்பில் சிறுநீரக நிபுணர் மருத்துவர் பிரம்மா, ஆர். தங்கராஜா, 'நீரிழிவால் ஏற்படும் பாதிப்புகளும் தீர்வுகளும்' எனும் தலைப்பில் விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் எம். அரவிந்தன், 'நீரிழிவால் ஏற்படும் பாதிப்பும் அதற்கான தீர்வுகளும்' எனும் தலைப்பில் சத்திரசிகிச்சை நிபுணர், மருத்துவர் எஸ். ரவிராஜ், 'நிறையுணவின் அவசியம்' எனும் விடயப்பொருளில் விசேட மருத்துவர் சி.ரம்மியா ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (ச-2)

### புதிய பதவியில் டேவிட் கமரூன்

லண்டன், நவ.15

பிரிட்டனின் முன்னாள் பிரதமர் டேவிட் கமரூன் அந்த நாட்டின் வெளியுறவுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக்கால் வழங்கப்பட்டுள்ளது.

பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் பொறுப்பில் இருந்த சுவெல்லா பிரேவர்மென் நேற்று அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். பலஸ்தீன ஆதரவுப் பேரணியைப் பொலிஸார் கையாண்ட விதம் தொடர்பில் அவர் தெரிவித்த கருத்து சர்ச்சைகளை ஏற்படுத்தியதை அடுத்தே அவர் அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, தற்போது வெளியுறவுச் செயலராக நியமிக்கப்பட்டுள்ள டேவிட் கமரூன், 2010ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டுவரை பிரிட்டனின் பிரதமராகப் பதவி வகித்திருந்தார். (எ-இ)

## புதினம் தெரியுமோ?

**நே**ற்றைக்கு உந்த பேஸ்புக்கில ஒரு விசயம் கண்ணிலதட்டுப்பட்டுது. நெடுந்தீவுக்கு வேலைக்குப் போய்வாற அரசாங்க உத்தியோகத்தர்மார் குமுதினி, வடதாரகை படகுகளில போய் வரேக்க 'வாக்கிக் கட்டுற'வசைமாரி பற்றின பதிவுதான் அது. பேஸ்புக்கில அதை வாசிக்காதவைக்காக 'நிரேஷ் ராகுலராஜா' எண்டவர் எழுதின அந்தப் பதிவில எப்பிடிச் சனங்கள் பேசுகினமெண்டு பாருங்கோ.

'அரச உத்தியோகத்தர்கள் கடைசியாக ஏறுங்கோ!'

'நீங்கள் அங்கபோய் வேலை செய்தா கிழிக்கப் போறியள்?.

'9 மணிக்கு போய் 3 மணிக்கு திரும்புற நீங்கள் எதுக்கு அவசரப்பட்டு ஏறுறியள்?

'இவையின்ட வேலையின்ர திறத்தில இவயளை யார் வரச் சொன்னது?

'நெடுந்தீவுக்கு வெளில இருந்து ஒவ்வொரு நாளும் வந்து என்னத்த பிடுங்கப் போயினம்?'

'அரசாங்கம் குவார்ட்டஸ் கட்டி குடுத்திருக்கு அதில தங்காமல் எதுக்கு இதில திரியினம்?''இந்த போட் நெடுந்தீவுக்காரருக்குத் தான் இலவசமாக ஓடுது உங்களுக்கு இல்ல. எதுக்கு வாறியள்?'

'உங்கட உயிருக்கு 5000 மாசம் படி தருகுது தானே. அதயும் வேண்டிக் கொண்டு இதுக்க ஏன் ஏறுறியள்?'

இப்பிடி அங்கத்தைச் சனம் பேசுறதைப் பற்றி அந்தப் பேஸ்புக் பதிவில சொல்லுப்பட்டிருக்கு.

சனம் கேக்கிற சில கேள்வியளில கொஞ்சம் நியாயம் இருக்குத்தான். போக்குவரத்து கஷ்டமெண்டால், வேலை செய்யிற இடத்தில இருக்கிற குவார்ட்டஸ் இருந்தால் அங்க தங்கி நின்டுட்டு கிழமைக்கு ஒருக்கா வந்து போனால், இப்பிடி ஏச்சுப் பேச்சு வாங்கத் தேவையில்லைதான்.

ஆனால் பிரச்சினை என்னெண்டால், குவார்ட்டஸ் எண்ட பேருள்ள இஞ்சத்தைக் கட்டடங்களில ஆடு, மாடு கூட இருக்கேலாத மாதிரித்தான் வைச்சிருப்பினம். அதைவிட ஒவ்வொருநாளும்வீட்டைபோய்வாறது பரவாயில்லை எண்டுதான் கன அரசாங்க உத்தியோகத்தர்மார் நினைக்கினம். வடமராட்சி, தென்மராட்சியில இருந்து நெடுந்தீவுக்கு தங்களுக்காக வேலை செய்யத்தான் வருகினம் எண்டதையும் சனம் நினைச்சுப் பாக்கவேணும். இல்லாட்டி நெடுந்தீவுக்கு இடமாற்றம் வந்தவுடனேயே ஆற்றையும் காலைக் கையைப் பிடிச்சாவது அதை அவை கான்சல் பண்ணிப்போட்டு வேற இடத்தில வேலை செய்திருக்கலாமே.

அப்ப தங்களுக்காக வாறவைக்கு தங்களுக்கெண்டு இலவசமா விடுகிற படகில இடம் குடுத்தா ஒண்டும் குறைஞ்சும் போகாது. அதைவிட வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கிழமை நாளுகளில அரசாங்க ஊழியர் நெடுந்தீவு போய் வாறதுக்கு தனியா ஒரு படகுச்சேவையை நடத்தினால் சனத்துக்கும் பிரச்சினை இல்லை, அரசாங்க உத்தியோகத்தர்மாரும் இப்பிடி ஏச்சுப்பேச்சு வாங்கத் தேவையில்லையே. சம்பந்தப்பட்டவையள் இதைப் பற்றி யோசிப்பினமோ?



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோளச் செய்கைக்கு இலவசமாக உரம்



கொழும்பு, நவ. 15

சோளப் பயிர்ச்செய்கைக்கு இலவசமாக உரம் விநியோகிக்கப்படவுள்ளது என்று விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் சிறிய அளவிலான விவசாய தொழில்முனைவோர் திட்டத்தின் ஊடாக இந்தப் போகத்தில் ஐந்து மாவட்டங்களில் 40 ஆயிரம் ஏக்கர் சோளம் பயிரிடப்படவுள்ளது. அதற்கென உரம் இலவசமாக வழங்கத் தீர்மா னிக்கப்பட் டுள்ளது.

யூரியாவுக்கு மேலதிகமாக டி. எஸ்.பி. மற்றும் எம்.ஓ.பி. ஆகிய உரங்களும் இலவசமாக வழங்கப்படவுள்ளன. அத்துடன், சோளப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான நிலத்தை பண்படுத்தும் பணிகளுக்காக நிதியொ துக்கீடு செய்வதற்கும் தீர்மானிக்கப் பட்டுள்ளது - என்றார். (ச-இ)





2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ..........................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

விடை : ..........................................

மெகா பரிசு

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

தே.அ.இல : ..........................................

தொ.இலக்கம் : ..........................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- மெகா பரிசு கூப்பன் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்பமுடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

இன்றைய ஆட்டம்

இந்தியா

நியூஸிலாந்து

இடம் : வான்கடே

நேரம்: பி.ப. 2.00

NEW ZEALAND CRICKET


## தேசியமட்ட விளையாட்டில் பெரியமடு இளம்பறவைகள்

வவுனியா, நவ. 15

34ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் வவுனியா மாவட்டத்தின் பெரியமடு கிராமத்தைச் சேர்ந்த இளம்பறவைகள் விளையாட்டுக் கழக வீராங்கனைகள் நால்வர் பங்கேற்கவுள்ளனர்.

வ.கிந்துஜா, செ.திரிசாயினி, ச. கம்சாயினி, த.டிலக்சனா ஆகியோரே மாவட்ட மட்டப் போட்டிகளில் தெரிவாகி தேசிய மட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

(ச-75)



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும் நாள். சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்படலாம். கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செலவுகள் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற் படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள்.

**கடகம்:** சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தந்தை யிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் உதவியுடன் சுபநிகழ்ச்சிக்கான பேச்சு சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கும். இன்று தட்சிணாமூர்த்தியை வழிபடுவதன்

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். இன்று குடும்பம் தொடர்பாக முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். யோசித்து முடிவு எடுப்பது நல்லது.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் லாபம் கூடும்.

**மகரம்:** கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கும். உணவு விஷயத்தில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு

**கும்பம்:** சிறு சிறு கருத்துவேறுபாடுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உள்ளது.

# ஆபத்தான வீதியை சீரமைக்க கோரிக்கை

கொக்குவில் - ஆனைக்கோட்டை பிரதான வீதியின் நடுவே ஆங்காங்கே பள்ளங்கள் ஏற்பட்டு, பயணிப்பதற்கு ஆபத்தான வீதியாக அந்த வீதி மாறியுள்ள நிலையில், வீதியை துரிதகதியில் சீரமைத்துத் தரவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொக்குவில் முதல் ஆனைக்கோட்டை வரையிலான பிரதான வீதியை காப்பெற் இடும் நடவடிக்கைகள் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் முன்னெடுக்கப் பட்டிருந்தது. எனினும், வீதியின் இடைப்பட்ட பகுதிகளில் சீரமைப்பு மேற்கொள்ளப்படவில்லை. அந்தப் பகுதியிலேயே இவ்வாறு பெரியதும் பேராபத்தானதுமான பள்ளங்கள் தோன்றியுள்ளன. மழைக்காலத்தைக் கருத்திற்கொண்டு தற்காலிகமாகவேனும் வீதியைச் சீரமைத்துத் தருமாறு மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (ம-125)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாட்டின் வருமானத்தை அதிகரிக்க முன்மொழிவு

## 'வெரிட்டே ரிசேர்ச்' பரிந்துரை!

**கொழும்பு, நவ. 15**

**இலங்கையின் வருவாயை அதிகரிப்பதற்கும், வளர்ச்சிக்குப் புத்துயிர் அளிப்பதையும் நோக்கமாக வடிவமைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளை 'வெரிட்டே ரிசேர்ச்' ஆய்வு நிறுவனம் வெளியிட்டுள்ளது.**

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக இந்த முன்மொழிவுகள் வெளியிடப் பட்டுள்ளன.

தடுத்து வைத்தல் வரி விகிதங்களை தற்போதுள்ள ஐந்து வீதத்திலிருந்து 10 வீதமாக உயர்த்தவேண்டும் என்பது முக்கியமான முன்மொழிவாக உள்ளது. இந்த முன்மொழிவின் மூலம் மேலதிகமாக 90 பில்லியன் ரூபாவை ஈட்டமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிகரெட் வரிகளை அட்டவணைப் படுத்துவதற்காக வெளியிடப்பட்ட பகுத்தறிவுச் சூத்திரத்தை ஏற்றுக் கொள்ளும் முன்மொழிவு மூலம் 35 பில்லியனுக்கும் அதிகமான தொகையை ஈட்டலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சீனி வரி குறைப்பை இரத்துச் செய்து, வரி மாற்றங்களைச் செய்வதில் நிர்வாக அதிகாரத்தை நீக்குதல் சிறப்புப் பண்டங்களுக்கான வரிச் சட்டத்தின் மூலம் அமைச்சருக்குக் கொடுக்கப்பட்ட நிர்வாக அதிகாரத்தின் மூலம் 25 பில்லியனுக்கும் அதிகமான தொகையை ஈட்டமுடியும்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் கொண்டுவரப்பட்ட சர்வதேச சூத்திரத்துக்கு மேலாக அதிகரித்த விலையை நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக, முழுத் தொழிற்றுறையின் மீதும் அதிகரிக்கப்பட்ட வரியின் ஊடாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் ஏற்படும் அதிகப்படியான செலவினங்களை மீளப்பெற முடியும். இதன்மூலம் போட்டித் தயாரிப்புகளிலிருந்து வசூலிக்கப்படும் மேலதிக வரிகள் மூலம் சுமார் 25 பில்லியன் ரூபாவை ஈட்டலாம்.

சொத்து வரிகளை மதிப்பிடுவதற்கும் வசூலிப்பதற்கும் விவரிக்கப்பட்ட முறையை நடைமுறைப்படுத்தல். இதன் முன்மொழிவு மூலம் வரி வசூலை 17 பில்லியன் ரூபாவால் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. (எ-இ)

# சுபுன் பத்திரகேவுக்கு பிணை அனுமதி

கொழும்பு, நவ.15

100 இலட்சம் ரூபாவை இலஞ்சம் பெற முயன்றபோது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மத்திய சுற்றாடல் அதிகார சபையின் முன்னாள் தலைவர் சுபுன் பத்திரகேவுக்கு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நேற்றுப் பிணை அனுமதி வழங்கியது.

25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் 25 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளுடன் அவருக்குப் பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஏனைய இரு சந்தேகநபர்களும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர். (எ-இ)



# கிளிநொச்சி நகரில் கூடிய மழைவீழ்ச்சி!

கிளிநொச்சி, நவ. 15

கிளிநொச்சி நகர்ப் பகுதியில், கடந்த சனிக்கிழமை முதல் கடந்த ஞாயிற்றுக்கிழமை வரையிலான 24 மணிநேரத்தில் அதிகூடிய மழைவீழ்ச்சியாக 78.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

மேற்படி காலப் பகுதியில் யாழ்.பருத்தித்துறையில் 50.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், அச்சுவேலியில் 23.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், திருநெல்வேலியில் 16.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-66)

# மதுபான உரிமம் இரத்து: 198 மில். ரூபா வருமானம்



கொழும்பு, நவ. 15

மதுவரி நிலுவைத் தொகையைச் செலுத்தத் தவறிய மதுபான உற்பத்தி நிறுவனங்களின் உரிமம் இரத்துச் செய்யப்பட்டதன் காரணமாக அரசாங்கம் இந்த மாதம் 198 மில்லியன் ரூபா மதுவரி நிலுவையைப் பெற்றுள்ளது என்று நாடாளுமன்ற வழிவகைகள் பற்றிய குழுவின் தலைவர் பாட்டலி சம்பிக ரணவக்க தெரிவித்துள்ளார்.

மதுவரி நிலுவையைச் செலுத்தத் தவறியவர்களின் உரிமம் இரத்துச் செய்யப்படவேண்டும் எனும் பரிந்துரையின் காரணமாக பல நிறுவனங்கள் நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு ஒப்பந்தம் செய்துள்ளன. 2023ஆம் ஆண்டுக்கான மதுவரி நிலுவைத் தொகையைச் செலுத்தத் தொடங்கியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2023ஆம் ஆண்டுக்கான நிலுவைத் தொகையாக 1.1 பில்லியன் ரூபா என மதிப்பிடப் பட்டுள்ளது. இந்தத் தொகையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக ஒன்பது தவணைகளில் கட்டணங்களைச் செலுத்துவதற்கு நான்கு நிறுவனங்கள் ஒப்புக் கொண்டுள்ளன.

இந்த நான்கு நிறுவனங்களும் கடந்த 6ஆம் திகதி 198 மில்லியன் ரூபாவை செலுத்தியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்குள் மீதமுள்ள 156 பில்லியன் ரூபா வரியைச் செலுத்துவதற்கு அந்த நிறுவனங்கள் ஒப்புக்கொண்டுள்ளன என்று நாடாளுமன்ற வழிவகைகள் தொடர்பான குழுவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (எ-இ)

# கீரிச்சம்பா பதுக்கியவருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம்!

கொழும்பு, நவ.15



3 இலட்சத்து 54 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆயிரத்து 365 கிலோ கிராம் கீரிச்சம்பா அரிசியை பதுக்கி வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்ட பல்பொருள் வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவருக்கு அத்தனகல்ல நீதிவான் மஞ்சுள கருணாரத்ன ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்ததுடன் அரிசியைப் பறிமுதல் செய்யவும் உத்தரவிட்டார்.

நிட்டம்புவ நகரிலுள்ள பல்பொருள் அங்காடி நிலைய உரிமையாளர் ஒருவருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத்தைச் செலுத்தாவிட்டால் 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் உத்தரவிடப்பட்டது. (எ-இ)

# கொழும்புக்கு வந்த ரிசிலியண்ட் லேடி

கொழும்பு, நவ.15

'ரிசிலியண்ட் லேடி' எனும் சொகுசு பயணிகள் கப்பல் நேற்றுக்காலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

2 ஆயிரத்து 324 பயணிகள் மற்றும் ஆயிரத்து 145 பணியாளர்களுடன் இந்தியாவில் இருந்து இந்தக் கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளது.

பஹாமாஸ் கொடியுடன் நாட்டை வந்தடைந்த இந்தக் கப்பலின் பயணிகள் கொழும்பு மற்றும் காலி ஆகிய பிரதேசங்களுக்கு பிரவேசிக்க உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊர்காவற்றுறைப் பிரதேசசபையின் எழுவைதீவு பொதுநூலகத்தின் தேசிய வாசிப்புமாத இறுதி நாள் நிகழ்வு அண்மையில் நூலக மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் தேசியவாசிப்பு மாதத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச-9)

# செயலாற்றுகை மதிப்பீடு: கிளி. செயலகம் முதலிடம்



கிளிநொச்சி, நவ. 15

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேசசெயலகங்களுக்கு இடையிலான பிரதான செயலாற்றுகை குறியீட்டு மதிப்பீட்டில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் 82.33 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், பூநகரி பிரதேச செயலகம் 80.55 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

இவற்றுக்கான விருது வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில், மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த செயலாற்றுகை குறிகாட்டி மதிப்பீட்டின்போது 'நிதி முகாமைத்துவம், பொது நிர்வாகம், திட்டமிடல் மற்றும் கணக்காய்வு' தொடர்பான விடயப்பரப்புகளில் 126 குறிகாட்டிகள் மதிப்பிடப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டச் செயல்க பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் க.லிங்கேஸ்வரன், யாழ்.வேலணை பிரதேச செயலாளர் கை.சிவகரன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகன்பவன் ஆகியோர் உள்ளடங்கிய குழு இந்த மதிப்பீடுகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச-113)



காலையடி, பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தில் முன்பள்ளி மாணவர்களின் நவம்பர் மாதக் கலை விழா நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன. (ய)



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சுன்னாகம் பொதுநூலகத்தின் டிஜிற்றல் அறிவு மையத்தின் ஏற்பாட்டில், புத்தாக்கக் கண்காட்சியொன்று சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்றது. கண்காட்சியில் நூலக டிஜிற்றல் அறிவுமைய மாணவர்களின் 15க்கும் மேற்பட்ட புத்தாக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. (ச-66)



வடக்கு கலாசாரப் பேரவையும் கலாசார அதிகாரசபையும் இணைந்து நடத்திய வடமராட்சி பண்பாட்டுப் பெருவிழாவில் நெல்லண்டை அறநெறிப் பாடசாலை மாணவர்களது வில்லுப்பாட்டு நிகழ்வும் இடம்பெற்றது. (ச-100)



மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய பரிசில் வழங்கல் நிகழ்வு வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அபிராமி இராசதுரை, சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், கௌரவ விருந்தினராக வித்தியாலயபழைய மாணவி அருள்நந்தினி ஜொபின்சன் ஆகியோர் பங்கேற்றனர். (ச-9-100-159)

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் க.விஜயகுமார் இறப்பு

முல்லைத்தீவு, நவ. 15

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினராகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப்பாளராகவும் செயற்பட்ட விஜயகுமார் நேற்றுமுன்தினம் காலமானார்.

அண்மைக்காலமாக சுகவீனமடைந்திருந்த அவர் நேற்று உயிரிழந்தார் என்பதை அவருடைய குடும்பத்தினர் உறுதிப்படுத்தியுள்ளனர். அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று உடையார்கட்டில் இடம்பெறவுள்ளது. (மு-13)

## மரண அறிவித்தல்

பிறப்பு 14 . 12 . 1942



இறப்பு 14 . 11 . 2023

### ஏரம்பு கந்தசாமி

உடுவிலை பிறப்பிடமாகவும் சங்குவேலி பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பு கந்தசாமி நேற்று (14.11.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஏரம்பு மற்றும் அன்னம்மா தம்பதியரின் அருமைமிகு மகனும், காலஞ்சென்ற சரவணை மற்றும் சின்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பூபதி அவர்களின் பாசமிகு கணவரும், சாந்தகுமாரன், திருமதி சதீஸ்குமாரி, திருமதி விஜயகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயரஜனி, தருமதாசன், சந்திரகுமார் ஆகியோரின் மாமனாரும், தர்சினி வசந்தகுமார், கஸ்தூரி, அகளங்கன், கோபிகா, ஜயந்தன், கலியுகன், தனுஷன், தாட்சாயினி, பவித்திரன், பவிசாயினி ஆகியோரின் பாசமிகு பேரனும், கரீஸ், ஹர்ஷிவ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2023) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பிள்ளையார் கோவிலடி,
சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.
076 692 7843

(CS 26956)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பாலியாறும் பட்ஜெட்டும்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் 2024ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை சமர்ப்பித்திருக்கின்றார். வடக்கு– கிழக்கு மாகாணங்களுக்கு பல நிதி ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டிருந்தாலும், அவை தேவையறிந்து மேற்கொள்ளப்பட்டனவாக இல்லையென்பதே பரவலான கருத்து.

வரவு– செலவுத் திட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டக் குடிதண்ணீர் பற்றாக்குறைக்குத் தீர்வாக பாலியாற்றுத் திட்டத்தை செயற்படுத்த 250 மில்லியன் ரூபா செலவிடப்படும் என்று அறிவித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. பாலியாற்றுத் திட்டம் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் குடிதண்ணீர் தேவைக்கு ஏற்ற திட்டம் என்று கருதப்படும் நிலையில், அந்தத் திட்டத்தைச் செயற்படுத்த 250 மில்லியன் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியிருக்கின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியது ஆறுமுகம் திட்டம்தான் என்பது நிபுணத்துவம் மிக்கவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பலகட்ட ஆய்வுகளின் பின்னர் நல்லாட்சி அரசின் காலத்தில் கப்பூதுவில் ஆறுமுகம் திட்டத்தை அடியொற்றிய குடிதண்ணீர் திட்டத்துக்கு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் அடிக்கல்லும் நடப்பட்டிருந்தது. யாழ்ப்பாணம் மாவட்டத்தின் குடிதண்ணீர் தேவைக்காக பாலியாற்றுத் திட்டமும் பரிந்துரைக்கப்பட்ட நிலையில், குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வல்லமை அந்தத் திட்டத்தில் இருக்கவில்லை. இதனாலேயே அந்த விடயம் தொடர்பில் எவரும் பெரிதாக அக்கறை காட்டவில்லை.

வடமராட்சி, கப்பூது பகுதியில் மழைநீரைத் தேக்கி அதனைக் குடிதண்ணீருக்காகப் பயன்படுத்தும் திட்டத்துக்கான அடிக்கல்லும் நடப்பட்டிருக்கும் நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாலியாற்றுத் திட்டத்துக்காக நிதி ஒதுக்கியுள்ளார். பொருத்தமற்ற திட்டம் ஒன்றுக்காக பல மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கின்றது. நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பாக அனைவரை விடவும் மிகவும் அக்கறை கொண்டவராகக் காட்டிக்கொள்ளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயனற்றது என்று கூறப்படும் திட்டத்துக்கான பல மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியிருக்கின்றார். வடக்கு– கிழக்கு மாகாணங்களுக்கு வரவு –செலவுத் திட்டத்தின் ஊடாக பெருந்தொகை நிதி ஒதுக்கப்படுகின்றது என்று காலங்காலமாக பாசாங்கு செய்யும் அரசாங்கங்கள், அந்த நிதி ஒதுக்கீடுகள் மூலம் எந்தவொரு ஆணியையும் பிடுங்கவில்லை. காலங்காலமாக ஒவ்வொரு ஆண்டும் ஒரே முன்மொழிவுகளே வெவ்வேறான வார்த்தைப் பிரயோகங்களால் முன்வைக்கப்படுகின்றன. இவற்றால் வடக்கு– கிழக்கு தமிழ் மக்கள் எந்தவொரு பயனையும் அடையவில்லை என்பதே யதார்த்தம். சர்வதேச நாடுகளையும், சர்வதேச அமைப்புகளையும் ஏமாற்றும் செயன்முறையின் ஒரு படிநிலையே இந்த நிதி ஒதுக்கீடுகளும், முன்மொழிவுகளும் என்றால் மிகையாகாது.

கடந்த கால அரசாங்கங்கள் போன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இந்தத் தந்திரத்தையே கைக்கொள்கின்றார். வடக்கு–கிழக்கு மாகாணங்களுக்கென பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் நடைமுறைக்கு வருமா என்பதும் சந்தேகமே. இதற்கு நல்லதொரு உதாரணம் அரசாங்கம் அறிவித்துள்ள பாலியாற்றுத் திட்டம். இரணைமடுத் திட்டத்தைப் போலவே பாலியாற்றுத் திட்டமும் கிடப்பில் நிரந்தரமாகப் போடப்படுவதற்கான வாய்ப்புகளே இன்றைய பொருளாதார நெருக்கடி நிலையில் பிரகாசமாக இருக்கின்றன. குண்டும் குழியுமாக இருக்கும் சிலமீற்றர் நீளமான வீதிகளையே 'காசில்லை' என்று சொல்லி தட்டிக்கழிக்கும் நிலையில், இப்போது பாலியாற்றை யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வந்துவிட்டுத்தான் ரணில் மறுவேலை பார்ப்பார் என்று எவரேனும் நினைத்தால் அதை விட முட்டாள்தனம் வேறில்லை.

**வடமாகாண மரநடுகை மாதம்** நவம்பர் 2023

"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக்காடுகளை விடச் சிறந்தது எதுவுமில்லை."

- சார்ள்ஸ் டார்வின் (பரிணாமவியலின் தந்தை)






# பார்வையற்றவர்களாக மாறும் இலங்கையர்கள்

**கொழும்பு, நவ.15**

**இலங்கையின் சனத்தொகையில் மூன்று மில்லியன் மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்களில் மூன்று இலட்சம் பேர் நீரிழிவு நோயால் பார்வையற்றவர்களாக மாறியுள்ளனர் என்றும் கண் சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர் மங்கள தனபால தெரிவித்துள்ளார்.**



பார்வையற்றவர்களில் பெரும்பாலானோர் 25 முதல் 74 வயதுக்குட்பட்டவர்களாவர். நிபுணர்களின் கூற்றுப்படி, கொழும்பு மாவட்டத்தின் சனத்தொகையில் 27 வீதமானவர்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். கிராமப்புறங்களில் எட்டு வீதமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 2021ஆம் ஆண்டில், உலகளவில் 531 மில்லியன் மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கண்டறியப்பட்டது. இந்த எண்ணிக்கையில் 35 வீதம் அல்லது 145 மில்லியன் பேர் நீரிழிவு நோயால் ஏதேனும் பார்வைக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 45 மில்லியன் பேர் பார்வையற்றவர்களாக மாறுகின்றனர் என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

2030ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 643 மில்லியனாகவும், 2040ஆம் ஆண்டில் 783 மில்லியனாகவும் பதிவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது - என்றார். (எ-இ)



## யாழ். மாவட்டத்திலும் அதிகரிக்கும் நீரிழிவு!

மருத்துவ நிபுணர்
அரவிந்தன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், நவ.15

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 20 சதவீதமானவர்களுக்கு நீரிழிவு நோய் காணப்படுகின்றது. கடந்த இரு ஆண்டுகளில் இளைஞர்கள் மட்டத்தில் நீரிழிவு நோய் அதிகரித்துள்ளது. தற்போது 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெறுகின்றனர். நீரிழிவை முற்றாகக் குணப்படுத்துவோம்.

-இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவின் நிபுணர் கலாநிதி ஆர்.ரி.அரவிந்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட நீரிழிவுக் கழகம் மற்றும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆகியவற்றின் ஏற்பாட்டில் உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வூட்டும் நடமாடும் இலவச பரிசோதனை சேவை நேற்று செவ்வாய்க்கிழமை மருத்துவமனையின் வெளி நோயாளர் சிகிச்சைப்பிரிவில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே மருத்துவ நிபுணர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பதவிநிலை மருத்துவர்கள், நீரிழிவு சிகிச்சைப்பிரிவின் மருத்துவக் குழாம், மருத்துவபீட மாணவர்கள், யாழ்ப்பாண மாவட்ட நீரிழிவுக் கழகத்தின் தலைவர் மைக்கல் டெபோட் மற்றும் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எ-27-125)

**நாளை** 16.11.2023 வியாழக்கிழமை ஐப்பசி 30

சுபநேரம் : 07.37 - 09.07
ராகுகாலம் : 01.37 - 03.07

சதுர்த்தி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

மாகியப்பிட்டி சண்டிலிப்பாயில் வசிக்கும் நல்லையா வாலாம்பிகை ஆகிய நான் எனது பெயரை நல்லையா பாலாம்பிகை என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் நல்லையா பாலாம்பிகை என்றே கையொப்ப மிட்டு பயன்படுத்துவேன் என்று இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

ந.பாலாம்பிகை

## காணவில்லை

அடையாள அட்டை 2, லைசன்ஸ், மோட்டார் சைக்கிள் ஆவணங்கள், Bankbook என்பன யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**0764876146/0767538268**

## வாடகைக்கு

யாழ் ஸ்ரான்லி வீதியில் உள்ள 62/17 (பழைய தபாற்கந்தோர் வீதி) மூன்று மாடிக்கட்டடம் வாடகைக்குண்டு.

**076 315 6470**




# இனிய வாழ்வு இல்லம் - தேவிபுரம் புதுக்குடியிருப்பு

# பதவி வெற்றிடம்

**புதுக்குயிருப்பு தேவிபுரம் பகுதியில் இயங்கும் கட்புலன், செவிப்புலன், பேச்சுத்திறன் குன்றிய மாணவர்கள் வதியும் இனிய வாழ்வு இல்லத்திற்கு கீழ்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

தகைமையுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை பூரணப்படுத்தி **எதிர்வரும் 30.11.2023**ம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ **"தலைவர், இனிய வாழ்வு இல்லம், தேவிபுரம் "அ" பகுதி புதுக்குடியிருப்பு"** என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**பதவி : முகாமையாளர் (வெற்றிடம் 01)**

**தகைமைகள்**

- வடக்கு மாகாணத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
- 55 வயதுக்கும் 62 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஏதாவது ஒரு துறையில் பட்டம் பெற்றவராக இருக்க வேண்டும் அல்லது அரச சேவையில் 20 வருடம் முகாமைத்துவ சேவையாற்றியவராக இருக்க வேண்டும்.
- எந்த நேரத்துக்கும் இல்லத்துக்கு வருகை தந்து சேவையாற்றக் கூடிய உடல் ஆரோக்கியம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- நல்ல ஒழுக்கமுடையவராகவும் சமூக சேவைகளில் ஈடுபாடு கொண்டவராக வும் இருத்தல் வேண்டும்.
- ஆங்கில மொழியில் எழுத வாசிக்க தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.
- சம்பளக் கொடுப்பனவு 32265/= எனும் அடிப்படைக் கொடுப்பனவுடன் இல்லத் தினால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் சேர்த்து வழங்கக்கப்படும்.

**பதவி : உதவி முகாமையாளர் (வெற்றிடம் 01)**

**தகைமைகள்**

- வடக்கு மாகாணத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்
- 55 வயதுக்கும் 62 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஏதாவது ஒரு துறையில் பட்டம் பெற்றவராக இருக்க வேண்டும். கல்வித்துறையில் அதிபர் அல்லது ஆசிரியராக கடமை யாற்றியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- நல்ல ஒழுக்கமுடையவராகவும் தேக ஆரோக்கியம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- சமூக சேவைகளில் ஈடுபாடு கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- சாதாரணமாக ஆங்கில மொழியில் எழுத வாசிக்க தெரிந்திருத்தல் விரும் பத்தக்கது.
- சம்பளக் கொடுப்பனவு 30040/= எனும் அடிப்படைக் கொடுப்பனவுடன் இல்லத்தினால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் சேர்த்து வழங்கப் படும்

**தலைவர்,**
**இனிய வாழ்வு இல்லம்**

(cs.26941) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'ஐகான் 2023' சர்வதேச புத்தாக்கப் போட்டியில் யாழ். பல்கலை தொழில்நுட்ப அலுவலருக்குத் தங்கம்

கனடா நாட்டின் ரொறொன்ரோ மாநிலத்தின் சர்வதேச புத்தாக்க மற்றும் மேம்பட்ட திறன்கள் சங்கம் ஏற்பாடு செய்த 8 ஆவது சர்வதேசப் புத்தாக்கப் போட்டியில் கலந்துகொண்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் கடற்றொழில் துறையில் பணியாற்றும் தொழில்நுட்ப அலுவலர் காலிங்கராஜா ஹரிச்சந்திரா தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

புத்தாக்க முன்முயற்சி கூட்டுறவு, சர்வதேச கண்டுபிடிப்பாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் உலக புத்தாக்க அறிவுசார் சொத்து சங்கங்கள் போன்ற மதிப்புமிக்க அமைப்புகளின் ஆதரவைப் பெற்று இந்தப் போட்டிகள் முன்னெடுக்கப்பட்டன. இதில் ஹரிச்சந்திரா பாதுகாப்புப் பிரிவின் கீழ் சிறப்புப் பரிசுடன் (2 பதக்கங்கள், 3 சான்றிதழ்கள்) தங்கப்பதக்கம் உட்பட மூன்று மதிப்புமிக்க சர்வதேச விருதுகளை வென்று, போட்டியில் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றார்.

கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் இலங்கை புத்தாக்க ஆணைக்குழுவின் உதவி ஆணையாளர் என்.ராஜபக்ஷவிடமிருந்து ஹரிச்சந்திரா தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழைப் பெற்றுக்கொண்டார்.

ஹரிச்சந்திரா, நேரக் காட்சியை உள்ளடக்கிய தானியங்கி குழாய் ஒன்றினை கண்டுபிடித்தார். அவர் தனது கண்டுபிடிப்புக்கு 'ஒழுங்குபடுத்தப்பட்ட கை கழுவுதலுக்கான ஒருங்கிணைந்த திரவ சவர்க்காரத்துடன் கூடிய தானியங்கி குழாய்' என்று பெயரிட்டிருந்தார்.

'கொவிட்-19' தொற்றுநோயை அடுத்து தனிப்பட்ட சுகாதாரத்தை பராமரிப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்த ஹரிச்சந்திரா சென்சார் அடிப்படையிலான தானியங்கி குழாயை வடிவமைத்தார். இந்தப் புதுமையான குழாய் ஒழுங்குபடுத்தப்பட்ட கை கழுவலை ஊக்குவிக்கவும், மாசுபாட்டைக் குறைக்கவும், துல்லியமான இடைவெளியில் நீர் மற்றும் திரவ சவர்க்காரத்தையும் வழங்குகிறது. இது பயனர் நடத்தை மற்றும் கை கழுவும் நடைமுறைகள் குறித்த புள்ளிவிவர தரவைச் சேகரிக்க டிஜிற்றல் ஸ்மாா்ட் கவுண்டர் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

1979ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க புலமைச்சொத்துச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகத்தினால் வழங்கப்பட்ட தனது கண்டுபிடிப்புக்கான காப்புரிமையையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வணிக இணைப்பு பகுதியினூடாக பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# தென்மராட்சிப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா!

தென்மராட்சிப் பிரதேச செயலகமும் தென்மராட்சிப் பிரதேச கலாசாரப்பேரவையும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா, தென்மராட்சி கலாசார மண்டபத்தில் அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் உஷா சுபலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் பங்கேற்றார்.

நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச கலாசாரப் பேரவை உபதலைவரும் சைவப்புலவருமான கா.கமலநாதன் அரங்கத் திறப்புரையை ஆற்றினார்.

தொடர்ந்து கைதடி இயல் சேத்திரா கல்விமன்ற மாணவிகளின் வரவேற்பு நடனம், மீசாலை சிவசக்தி சங்கீத நர்த்தனாலய மாணவிகளின் சிவன் நடனம், சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி மாணவர் இணைந்து வழங்கிய பல்லியம் இசை என்பன சபையைக் கவர்ந்தன.

அத்துடன் பிரதேசத்தில் நீண்டகாலமாக கலைப்பணியாற்றி வரும் நான்கு கலைஞர்களுக்கு பிரதேசத்தின் உயரிய விருதான 'கலைசாகரம்' விருதுகளும் வளர்ந்து வரும் கலைஞர்களுக்கான 'இளங்கலைஞர்' விருதுகளும் வழங்கப்பட்டன.

(கிருஷ்ணாஜயா - கஜிந்தன்)







கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா, மாவட்டச் செயலரும் பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக தொழிநுட்பப் பீடத்தின் பீடாதிபதி சிவமதி சிவச்சந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். நிகழ்வில் 'கலைக்கிளி', 'இளங்கலைஞர்' விருதுகள் கலைஞர்களுக்கு வழங்கப்பட்டதுடன் பரிசளிப்பு வைபவமும் இடம்பெற்றது.

(தேவிஆனந்த்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயற்கையை தன் நண்பனாய் கொண்டு, மிகப்பெரும் மரநடுகைத் திட்டங்களை செயற்படுத்தியவரும், கொடையாளரும், தொழிலதிபருமான மில்க்வைற் கனகராசாவின் 96 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

# மில்க்வைற் கனகராசா
## இயற்கையை உயிராய் நேசித்த செயல்வீரன்

- சைவப்புலவர் வைத்தியலிங்கம் பாலகிருஷ்ணன்



வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மர நடுகைத் திட்டங்களின் பெரும்புள்ளியாக அறியப்படுகின்றார் மில்க்வைற் கனகராசா. தொழிலதிபரான அவர், தன் பணத்தை - செல்வாக்கை - சமூகத் தொடர்பை இந்த மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு நேர்த்தியாக விதைத்திருக்கின்றார் என்றால் அதில் இரண்டாவது கருத்து இல்லை.

மில்க்வைற் கனகராசா 1927ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2ஆம் திகதி பிறந்தார். இந்த ஆண்டில் அவருடைய தந்தையா ரான முருகேசு கந்தையாவால் குடிசைக் கைத்தொழிலாக சவர்க்காரத் தொழிலும் ஆரம்பிக்கப்பட்டது. கனகராசா கல்வியில் சிறந்து கற்க வேண்டியதை கசடறக்கற்று கம்பனையில் ஆசிரியப் பணியை மேற் கொண்டிருந்தார். சிறிது காலத்தின் பின் தந்தையின் அழைப்பை ஏற்று ஆசிரியப் பணியைத் துறந்து தந்தைக்கு உதவியாக குடிசைக் கைத்தொழிலை நடத்தி வந்தார். சவர்க்காரம் துணிகளை வெண்மையாக் குவது போன்று அன்னார் வெளியிட்ட சிறு கைநூல்கள் தேவார திருவாசகங்கள், திருக்குறள் கருத்துகள், பொன்மொழிகள், நன்மொழிகள், அறச் சிந்தனைகள், காந்தீயக் கருத்துகள் ஆகியன அடங்கி வெளியிட்ட நூல்கள் மற்றும் பிரசுரங்கள் மக்களின் மனத் தூய்மைக்கும் ஆத்ம வளர்ச்சிக்கும் வழியமைத்தன.

தொழில்வளம் பெருக்கி தாம் ஈட்டும் பணத்தினை வங்கிகளிலும் வட்டிகளிலும் சேர்க்கும் இக்காலத்தில் தொழில் அதிபர் வறியவர்களின் பசிப் பிணியைப் போக்குதல், மண்டபம் அமைத்தல், நீர்நிலைகளைப் பேணுதல், பஸ் தரிப்பிடம் அமைத்தல், கோயில்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள் போன்றவற்றின் தேவைகளுக்கு நிதி உதவி வழங்குதல் மற்றும் மருத்துவமனைகள், அநாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் என்பவற்றுக்கு கொடைகளை வழங்குதல் உள்ளிட்ட அறப்பணிகளை ஆற்றிவந்தார்.

### சூழலியல் பணிகள்

வறண்ட பிரதேசம், வாழ்வு பெற்று விளங்க பெரியளவில் மரம் நாட்டும் பணியை தனி ஒரு மனிதனாக ஆரம்பித்த மில்க்வைற் தொழிலதிபர் கலாநிதி கனகராசா மக்கள் யுகத்தின் மாண்பினை அனுசரித்து அவரவர் பிறந்த நாள்களில் எம்மரமாயினும் ஒரு மரம் நடுக என பணிவான வேண்டுகோள் விடுத்து அதைச் செயற்படுத்துவதற்கு தன்னாலான உதவிகளையும் செய்துவந்தார். மட்டுமல்லாமல் பசுமைப் புரட்சியை பெருமெடுப்பில் செயற்படுத்தினார். அவர் எங்கெல்லாம் மரநடுகையை மேற்கொண்டாரோ அந்த தேசங்கள் பசுமைத் தேசங்களாக இன்றும் இருக்கின்றன.

1960இன் பின்னரைப்பகுதியில் பனை வளம் பற்றிச் சிந்தித்து தனி ஒரு மனிதனாக நின்று செயற்பட முனைந்தார் கலாநிதி கனகராசா. பாடசாலைகள், பொது மன்றங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் போன்றவை மூலம் பனம் விதைகளை சேகரித்து வழங்கு வோருக்கு அன்பளிப்புகளை வழங்கியும், பனைவளம் பெருக்கிய பண்பாளன் என்ற பட்டமும் சான்றிதழும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவ்வாறு சேகரிக்கப்பட்ட பனம் விதைகளை வறண்ட வலயத்திலுள்ள குடியேற்றத்திட்டங்களுக்கு எடுத்துச் சென்று தானே நாட்டுவித்தார். அத்துடன் 1969ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கு லொறிகளில் பனம் விதைகளை எடுத்துச் சென்று அங்கும் அவற்றை நாட்டுவித்தார். மேற்குறிப்பிட்ட இடங்கள் இன்று பனம் சோலைகளாகவும், தோப்புகளாகவும் காட்சி அளிப்பதற்கு காரணகர்த்தாவாகவும் தனி ஒருவனாகவும் இருந்து செயற்பட்டவர் கலாநிதி கனகராசா என்றால் எவரும் மறுத்துரைக்க மாட்டார்கள்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பனை வளத்தை உச்ச நிலைக்கு அபிவிருத்தி செய்து நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்குடன்,

01. பனம் பொருள்களின் வர்த்தக வாய்ப்பினை ஆராய்தல்
02. பனைவளத்தை திட்டமிட்ட சிறுதோப்புகளாக பயிரிட்டு விருத்தி செய்தல்
03. பனை ஆராய்ச்சி நிறுவனத்தை நிறுவுதல்

போன்றவற்றை நடைமுறைக்கு கொண்டு வரவேண்டுமென்ற நோக்கோடு செயற்பட்டார். 1970ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சராக இருந்த கொல்வின் ஆர்.டி.சில்வாவை, கனகராசா பேராசிரியர் கா.குலரட்ணம், வி.சிவசுப்பிரமணியம், வ.சச்சிதானந்தன் போன்றவர்களுடன் நேரில் சந்தித்து தேயிலை, இறப்பர் போன்ற பெருந்தோட்டப் பயிர்களுக்கென ஆராய்ச்சி சபைகள் இருப்பதுபோல், பனை வளத்தையும் பேணுவதற்கு தனிச் சபையை உருவாக்கவேண்டும் என்று அழுத்தம் வழங்கினார். 1978ஆம் ஆண்டு அரச நியதிச்சட்டத்தின்கீழ் பனை அபிவிருத்திச்சபை தோற்றம் பெற்றமைக்கு இவர்கள் வழங்கிய அழுத்தமும் ஒரு காரணம். கனகராசாவை தலைமைப் பதவி ஏற்குமாறு அரசினரும் பல்வேறுதுறைசார் அறிஞர்களும் வற்புறுத்தி கேட்டபொழுதிலும் அவர் அப்பதவியை ஏற்க மறுத்துடன், இயக்குநர் சபைப் பணிப்பாளராக நியமனம் பெற்றுச் செயற்பட்டார். இவர் சபையில் இயக்குநராக இருந்து பனை வளம் சம்பந்தமான ஆக்கபூர்வமான ஆலோசனைகளை காலத்துக்குக்காலம் வழங்கி பனை அபிவிருத்திச்சபையின் செயற்பாடுகளுக்கு மெருகூட்டினார். இயக்குநர்சபை பணிப்பாளருக்குரிய கொடுப்பனவுப் பணத்தையும் ஏற்க மறுத்து பணி புரிந்தார். இவருடைய வாகனத்தின் முன்பு பனைச் சின்னம் பொறிக்கப்பட்ட கொடி அசைந்த வண்ணம் இருக்கும். அத்துடன் அவருடைய லொறிகளில் ஒரு பக்கம் தென்னை மரங்களும், ஒரு பக்கம் பனை மரங்களும் பொறிக்கப்பட்டிருக்கும்.

வடக்கு - கிழக்கில் மட்டுமல்லாமல் நாடெங்கும் பனைவளத்தைப் பெருக்கவும், இயற்கையின் இருப்பை உறுதிப்படுத்தவும் மில்க்வைற் கனகராசா தீராத வேட்கையுடன் செயற்பட்டார் என்றால் அதில் மறுவிவாதம் இல்லை.

# பள்ளிக்கல்வியே அறிவின் ஊற்று

சவுந்து

'எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்' என்பது ஔவையார் கூற்று. அதாவது கணிதமும், மொழியும் கல்வியின் அடிப்படையான கண்கள். இவற்றில் எம் மாணவச் செல்வங்களை வளப்படுத்திக் கொள்வதற்கு, வகுப்பறையில் பாடத்தைக் கற்கும்போது கவனம் சிதறாமல் ஒருங்கிணைந்து உற்று நோக்கி அவர்களைக் கற்கப்பண்ண வேண்டும்.

அண்மையில் யுனிசெப் நிறுவனமும், கல்வித் திணைக்களமும் இணைந்து மேற்கொண்ட ஆய்வில் வாசிக்கவும், எழுதவும், எண்களை இனங்காணவும் புலமையின்றி, திறனற்றவர்களாக ஆரம்பக் கல்வியில் தற்போது கற்கும் மாணவர்கள் காணப்படுகின்றார்கள் எனக் கண்டறியப்பட்டது. இதன் காரணமாக இவர்கள் எதிர்காலத்தில் கல்வி, வாழ்வியல், மற்றும் தொழில்வாய்ப்பில் பாதிக்கப்படுவார்கள். எனவே இந்த மாணவர்கள் இதிலிருந்து முன்னேறுவதற்கு முதலில் இந்த மாணவர்களின் வயிற்றுக்கொதிப்பை ஆற்றவேண்டும். அதாவது பெரும்பாலான சிறார்கள் காலை உணவு இன்றி 'காதை' அடைக்கும் பசியோடு பாடசாலைக்கு வருகிறார்கள். அண்மையில்கூட கிளிநொச்சி மாவட்டத்தில் வெளிநாட்டு (ஜப்பான்) தூதுவர் வருகைதந்த பொழுது ஒரு மாணவர் மயங்கி விழுந்தது அறிந்தவிடயமே.

முதலில் வயிற்றுப் பசியுடன் வரும் சிறார்களுக்கு பாடசாலையில் போஷணை உணவை அரசு வழங்கவேண்டும். அதன்பின்பு இழந்த கல்வியை புதிய பொறிமுறைகளைக் கையாண்டு கற்பித்தல் வேண்டும். இதற்கு ஆசிரியர்களும் உண்மையான அர்ப்பணிப்புடன் அயராது உழைக்கவேண்டும். பெற்றோர் பூரண ஒத்துழைப்பை அர்ப்பணிப்புடனும் ஆர்வத்துடனும் இடையறாது வழங்கவேண்டும். அரசு, பாதுகாப்புத்துறை, புத்தாசனத்துறை, தொல்பொருள்துறை போன்றவற்றுக்கு இனிமேலும் அதிகளவு நிதியை ஒதுக்குவதை விடுத்து சிறார்களின் கல்வித் தேவை, மருத்துவத் தேவைக்கு ஒதுக்கவேண்டும். இல்லையேல் நாடு அடிமுட்டாள்களின் நாடாக மாறிவிடும்.

ஒழுக்கம், கட்டுப்பாடு, விடாமுயற்சி, உழைப்பு, நேர்மை ஆகிய பண்புகளைப் பாடசாலைக் கல்விஊடாக சிறார்களுக்கு வளர்க்கும்போது, எவர்மீதும் சார்ந்து வாழாத நம்பிக்கையைத் தரும். அந்த நம்பிக்கை மற்றவர்களின் சுதந்திரத்தை மதிக்கும் நற்பண்பை உருவாக்கி வாழ்வில் வெற்றியைப் பெற்றுத்தரும். இன்றைய் கற்பித்தல் செயற்பாடுகள் பணத்துக்கான மூலதனமாகவும், பணம் காய்க்கும் மரமாகவும் பரிணமித்துள்ளன. இன்று நாட்டில் வறுமை, வேலையில்லாப் பிரச்சினைகளுக்கு கல்வியானது வணிகமாக மாறியதே முதன்மைக் காரணம். நடுத்தர, ஏழைக் குடும்பங்களில் இருந்துவரும் மாணவர்கள் கல்வி கற்க பணம் இல்லாததால் இடைவிலகல் ஏற்படுகிறது. இலங்கையில் இலவசக் கல்வி நடைமுறையில் உள்ளது என்று கூறினாலும் மாணவர்கள் கற்பதற்கான எழுது பொருள்கள் பொருளாதார நெருக்கடியால் நான்கு மடங்கு, ஐந்து மடங்காக அதிகரித்துள்ளன. இதை வாங்கமுடியாத பெற்றோரின் பிள்ளைகள் இடை விலகுகிறார்கள்.

அரச பாடசாலைகளில் பாடசாலை அபிவிருத்தி நிதி, வசதிக் கட்டணம் என்ற பெயர்களில் பல ஆயிரங்களை வசூலிக்கிறார்கள். சில அரச முன்னணிப் பாடசாலைகளில் நன்கொடை என்ற பெயரில் இலட்சம் ரூபாய்களைப் பெறுகிறார்கள். இவையாவும் ஊரறிந்த விடயங்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கண்டுகொள்ளாது மௌனமாக இருப்பது எமது மாணவச் செல்வங்களுக்குச் செய்யும் அநீதி. மாறாக அயல் பாடசாலைகளான கிராமப் பாடசாலைகளில் கல்வி கற்பதற்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை மற்றும் வளப்பற்றாக்குறைகள் காணப்படுகின்றன. மாணவச் செல்வங்களின் கல்விக்கு எந்தப் பக்கம் பார்த்தாலும் சங்கு ஊதப்படுகிறது. இவ்வாறான நிலையில் எவ்வாறு சிறார்கள் எழுதவும், வாசிக்கவும், கணிதப் புரிதல்களை ஏற்படுத்தவும் முடியும்? ஆரம்பக் கல்விக் கட்டமைப்பில் தேடல், சுயசிந்தனை விருத்தியை வியாபிக்க வைக்கவேண்டும். இல்லையேல் வளமான கல்விச் சமூகத்தை உருவாக்கமுடியாது. இத்தகைய வளமான ஆரம்பக் கல்விக் கட்டமைப்பை நாம் ஸ்கண்டிநேவிய நாடுகளிலிருந்து (பின்லாந்து, நோர்வே, சுவீடன், டென்மார்க்) கற்றுக்கொள்ளவேண்டும். 'கண்களால் காணும் உலகம் வேறு, அறிவால் அறிந்துகொள்ளும் உலகம் வேறு' என்பதை எம் இளந்தலைமுறையினர் புரிதலுடன் கற்கவேண்டும். 'ஆசிரியர்கள் வெறும் வார்த்தைகளைக் கொண்டு உண்மையான கல்வியை உணர்த்தவோ, ஊட்டவோ முடியாதென்பது பிளேட்டோவின் கோட்பாடு' ஆகும். அதாவது ஆசிரியன் வாழ்கின்ற விதத்திலே, சொல்லிக் கொடுக்கிற முறையிலேதான் ஒரு மாணவனின் அறிவு தெளிவடைகிறது. உள்ளம் பண்படுகிறது என்பதே திடமான உண்மை. ஒரு விடயத்தில் தெளிவுபெற அது தொடர்பான அறிவும், ஆராய்ச்சிக் கல்வியும் அவசியம். ஒரு தேசத்தின் உயர்வு தாழ்வு வாழ்வு அந்தத் தேசத்தின் இளையோர் பெறும் கல்வியைப் பொறுத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தசாக கிருஹயக்ஞ அழைப்பு



நிகழும் சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 20ம் நாள் (06.11.2023) திங்கட்கிழமை அபரபட்சம் நவமி திதியில் சிவபதமடைந்த

## அமரர் காசிபக் கோத்திரம் ஸ்ரீமதி தர்சினி கபிலன்சர்மா

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள்

(15.11.2023) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் தஸாகம்.
(16.11.2023) வியாழக்கிழமை ஏகோதிஷ்டம் மாசிகம்
(17.11.2023) வெள்ளிக்கிழமை சபிண்டீகரணம்
(18.11.2023) சனிக்கிழமை கிரகயக்ஞம் சமாராதனை


அனைவரும் மேற்படி கிரியைகளில் கலந்து ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கண்ணகி அம்மன் கோவில்,
வறுத்தலை விளான்,
தெல்லிப்பளை.

குடும்பத்தினர்
077 584 8827

# 7ஆம் ஆண்டு நினைவு

தோற்றம்
27.07.1941



மறைவு
01.11.2016

## அமரர் கந்தையா இராசேந்திரம்

(ஓய்வுபெற்ற முன்னாள் பிஸ்கால் உத்தியோகத்தர்)

திதி: துதியை

அன்புருவே மறைந்தாலும் அழியாது உங்கள் நினைவலைகள்
ஆண்டுகள் ஏழு பறந்தே ஓடோடி மறைந்திடினும்
ஓயாது உங்கள் இனிய நினைவலைகள்.

கலைமாமணி வீதி, கட்டைப்பிராய்.

(cs 51644) (N.1)

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## செல்வரத்தினம் சின்னம்மா

மண்கும்பானை பிறப்பிடமாகவும் ஆறுகால் மடத்தில் வசித்தவரும் தற்பொழுது கொக்குவிலில் வசித்தவருமாகிய செல்வரத்தினம் சின்னம்மா 13.11.2023 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.47, சபாபதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 2489 134

# போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம் வாகன சுத்திகரிப்புச் சேவைகளிற்கான கேள்வி விலை கோரல் - 2024

1. யாழ். போதனா வைத்தியசாலை பெறுகைக்குழுவின் தலைவரினால் 2024ம் வருடத்திற்கான யாழ். போதனா வைத்தியசாலை வாகனங்களிற்கு சுத்திகரிப்புச் சேவையினை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள் /ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.
2. கேள்வி மனுதாரர் வாகன சுத்திகரிப்புச் சேவைக்குரிய வியாபார அனுமதிப் பத்திரத்தின் பிரதியுடன், கேள்வி ஆவணக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 1000.00 ஐ யாழ். போதனா வைத்தியசாலை அலுவலகக் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும், தேசிய அடையாள அட்டையையும் சமர்ப் பித்து கேள்வி விண்ணப்பங்களை 15.11.2023 முதல் 05.12.2023 வரை மு.ப.9.00- பி.ப 3.00 மணிவரை யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தியசாலைச் செயலாளர் அறையில் பெற்றுக்கொள்ளலாம்.
3. கள்வி விண்ணப்பங்களின் மூலப்பிரதியினை தயார் செய்து தபாலுறையிலிட்டு முத்திரை பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் "வாகன சுத்திகரிப்புச் சேவைகளிற்கான கேள்வி விலை கோரல் - 2024" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
4. பூரணப்படுத்திய கேள்வி ஆவணங்களை 05.12.2023 திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அறையில் வைக்கப் பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ கிடைக்கச் செய்தல் வேண்டும்.
5. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே அவை அவ்விடத்திலேயே திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமூகமளிப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.
6. கேள்வி ஆவணங்களை யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாக பிரிவில் இலவசமாக பார்வையிடலாம்.
7. அரசாங்க ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களுக்கு கேள்வி ஆவணங்கள் வழங்கப்படமாட்டாது.
8. குறித்த கேள்வியை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவைச் சார்ந்தது.
9. மேலதிக விபரங்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியசாலைச் செயலாளரை 021 222 7764 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

உதயம்
09
.
01
.
1946



அஸ்தமனம்
14
.
11
.
2023

## திருமதி சுசீலாதேவி இராஜநாதன்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுசீலாதேவி இராஜநாதன் நேற்று (14.11.2023) செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற தங்கரத்தினம் இராசரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தில்லைநாதன் இராசம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற தில்லைநாதன் இராஜநாதனின் அன்பு மனைவியும், (காலஞ்சென்ற) சத்தியபாமா மற்றும் சரோ, சாந்தா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சண்முகம், அன்னராசா ஆகியோரின் மைத்துனியும் காயத்ரி, ஷாலினி, ஹர்சினி ஆகியோரின் அன்புக்குரிய சிறிய தாயும் நிதிதாசன், நிதாகரன், கார்த்திக் ஆகியோரின் மாமியாரும் வரூஷா, சாம்பவி, சாருகா, பிரவோஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (15.11.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

170, சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
திருநெல்வேலி.


தகவல்
சாந்தா இராசரத்தினம்
(சகோதரி)
021-2222714

(CS 26955) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 07 . 1939



மறைவு 10 . 11 . 2023

## நடராசா முத்துலிங்கம்

யாழ். செட்டித்தெருவை பிறப்பிடமாகவும், திருநெல்வேலி இராமநாதன் வீதியை (பரமேஸ்வராச்சந்தி) வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா முத்துலிங்கம் கடந்த (10-11-2023) வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா பொன்னம்மா தம்பதியினரின் புதல்வனும், சித்திரசேனர் பறுபதம் தம்பதியினரின் பாசமிகு மருமகனும், மகேந்திரநாயகி அவர்களின் பாசமிகு கணவரும், நடராசா தியாகராசா அவர்களின் அன்புச் சகோதரனும், கிருஸ்ணகுமார் (கண்ணண்), உதயகுமார் (பாபு), சந்திரிக்கா (கங்கா), சூரியகுமார் (சூரி), பிறேமானந்தகுமார் (பிறேம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயமாலா (மாலா), வசந்தாதேவி, மதிவதனா, சர்மிக்கா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கீர்த்தனா, கிருசாந்தன், பிரிந்தன், சியாணுகா, தருண், வினுசன், டரணித் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.11.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

214/9 சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 330 2853
077 220 8439

CS 26945 AK.1

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 28.01.1938

மறைவு 16.10.2023

## அமரர் காசிப்பிள்ளை தவராசா

(ஓய்வுபெற்ற அதிபர், யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (15.11.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வு இடம்பெறும்.


அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு பலவழிகளிலும் உதவி புரிந்த நெஞ்சா களுக்கும் நேரிலும், தொலைபேசி ஊடாகவும்,சமூகஊடகங்களுடகவும் ஆறுத தெரிவித்தோருக்கும், இறுதிக்கிரியையில் கலந்து கொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு அனைவரையும் மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

கட்டப்பிராய்,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்
075 650 884

# மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 09 . 1948



மறைவு 13 . 11 . 2023

## பொன்னன் துரைறாஜசிங்கம்

(ஓய்வு பெற்ற இலங்கை போக்குவரத்து சபை திடீர் பரிசோதகர்)

உரும்பிராயினை பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னன் துரைறாஜசிங்கம் (ஓய்வு பெற்ற இலங்கை போக்குவரத்து சபை திடீர் பரிசோதகர்) நேற்று முன்தினம் (13-11-2023) திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னன் மாணிக்கம் அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாதர் ஜேம்ஸ் தம்பிஐயா செல்வநாயகி அவர்களின் அன்பு மருமகனும் விமலாதேவியின் (ஓய்வு பெற்ற ப.நோ. கூட்டுறவு சங்க கிளை முகாமையாளர்) அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, பூமணி, நடராசா மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜிதா, அபர்ணா, விமல்ராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேஸ்குமார், சோதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான கேசவன், இராசையா மற்றும் கிறிஸ்துமலர், மகாதேவா, சறோஜினிதேவி, கருணாகரன், மனோகர், றஞ்சினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2023) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

211, ஆசீர்வாதப்பர் வீதி,

தகவல் :

# மரண அறிவித்தல்

பிறப்பு 01 . 09 . 1956



இறப்பு 13 . 11 . 2023

## சூசைப்பிள்ளை ஜோன் அரியதாஸ்

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை ஜோன் அரியதாஸ் கடந்த (13.11.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை-மாக்கிறட் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான செபமாலை-அஞ்சலீனா (ஆசிரியர்கள் ஓய்வுநிலை) தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற மேரி மல்லிகாவின் (ஆசிரியர் - ஓய்வுநிலை, சென். பற்றிக்ஸ் கல் லூரி) பாசமிகு கணவரும், காலஞ்சென்ற அல்வீனஸ் மற்றும் அலோசியஸ்தாசன் அமலசோதி, ஜெனோசியஸ், மேரிறோஸ் (பிரான்ஸ்), யூடிக்கொன்ஸ்சிக்கா (ஆசிரியர் - யா/மல்லாகம் ம.வி), அருட்பணி அல்றின் (O.M.I). நொயலின் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மேரி லூசியா, இமெல்டா புஸ்பம், அலன்றோஸ், ஜெறாட், மரியகொறற்றி காலஞ்சென்ற அலோசியஸ் மரியதாஸ் (Police SI) மற்றும் லூசியன் மரியதாஸ் (ஆசிரியர் - ஓய்வுநிலை) றபேக்கா (இத்தாலி) ஆகியோரின் மைத்துனரும், அருட்பிரகாஸம் (இத்தாலி), காலஞ்சென்ற அருளானந்தம் ஆகியோரின் மைத்துனரும், றொனி கிளிபோர்ட் அலோடியா (ஆசிரியர் - யா/மகாஜனாக் கல்லூரி), மரியராஜ் (பிரான்ஸ்), அன்ரனிராஜ் (கணக்காளர்) அருள்ராஜ் (ஆசிரியர், யா/ வேலணை மத்திய கல்லூரி), மாகிறட் கத்தரின், யோசவ்ராஜ், மாக்றெட் இம்மாக்குளேற், அமலா ஆகியோரின் சிறிய தந்தையும், அல்வின்-ஆன் அலன்ரீனா ஜோசவ்வாஸ் குயின் அலன்ரீனா (கனடா), றொஜர் (பிரான்ஸ்), றெஜி அமேலா (பிரான்ஸ்) குளோறியா (பிரான்ஸ்), அலன் பீற்றர் (DPMC Coordinator) அலன் டொனால்ட் (Pepsi Rep), ஆன்ஸ்ரன் (இத்தாலி), வாரிசா (இத்தாலி), பிறாயன் (பிரான்ஸ்), றெஜி ரெரன்சியா டொலின் பவுலா, ஆன் கிளறென்சியா, அனிமாக்கிறாரிஸ் ஆகியோரின் அன்பு மாமனும், எட்றீனா (கனடா), குளாவிஸ், பென்டிற்றா, கத்தரீனா, மக்றோம், அநைஸ், எய்தர், கத்தலியா (பிரான்ஸ்) பெனிற்றோ, எட்வேட் ராஜா (கனடா), ஆரோன் (பிரான்ஸ்), பிறின்சஸ் சார்லொத் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (15.11.2023) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு புனித [illegible] ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு அருகே சக்திமிகு நிலநடுக்கம்

கொழும்பு, நவ. 15

இலங்கைக்கு அருகே உள்ள கடற்பரப்பில் நேற்று நண்பகல் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தை அடுத்து திருச்செந்தூர் ஆலய கடற்கரையில் பக்தர்கள் குளிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தென்கிழக்கு கடற்பகுதியில், கொழும்பில் இருந்து ஆயிரத்து 326 கிலோமீற்றர் தொலைவில், கடற்பரப்பிலிருந்து 10 கிலோமீற்றர் ஆழத்தில் 6.2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாகத் தேசிய நில அதிர்வு ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இலங்கையின் தென்கிழக்கு கடற்பகுதியில் ஏற்பட்டுள்ள சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தின் எதிரொலியாக இந்தியாவின் திருச்செந்தூர் கோயிலுக்கு வரும் பக்தர்கள் கடற்கரையில் குளிக்க தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது.

(ம-100)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சர்வதேச ஐக்கிய கலாம் நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கும் நிகழ்வு இந்தியாவில் ஜே.பி.ஹோட்டல், கோயம்பேடு, சென்னையில் 15.10.2023 அன்று நிகழ்ந்த வேளை யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய



**கலாநிதி இராசையா குவேந்திரநாதன்**

அவர்களின் சமூக சேவையினைப் பாராட்டி அப்துல் காலாம் சமாதான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையை நாமும் பாராட்டுவதோடு அவரது சமூகசேவை மென்மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.

Congratulations Congratulations

உரிமையாளரும், ஊழியர்களும்

**ஐங்கரன் களஞ்சியம்**

109, பலாலி வீதி, திருநெல்வேலி.

(cr.) (N.1)



## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் / சேவை மையங்களில் 31.08.2022 வரை அடகு வைக்கப் பட்டுள்ளதும் ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட 14.12.2023 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 15.12.2023 மற்றும் 16.12.2023**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | |
|---|---|
| கிளை | யாழ்/ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ் / பல்கலைக் கழகம், யாழ் / கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி. |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

தொ.பே. இல : **021-222 2601**

www.peoplesbank.lk 1961

PEOPLE'S BANK


Pride of the Nation



## மரண அறிவித்தல்

தோற்றம் 19 - 08 - 1934

மறைவு 14 - 11 - 2023



### திருமதி இராசமணி செல்லத்துரை

உரும்பிராய் தெற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி செல்லத்துரை நேற்று (14.11.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Dr. மயில்வாகனம் தங்கம்மா (குட்டிப்பிள்ளை) தம்பதிகளின் ஏக புதல்வியும், காலஞ்சென்ற தம்பையா இலக்ஷ்மிபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற P.W.D ஓவசியர் தம்பையா செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும், சாந்தி, ஸ்ரீரஞ்ஜனி, காலஞ்சென்ற உதயகுமார், சந்திரகுமார், நிமலினி ஆகியோரின் அன்புத் தாயாரும், உதயகுமார், தயாநந்தன், ஞானரட்ணம் ஆகியோரின் அன்பு மாமியாரும், பைரவி, பிரவின், ஆரபி, சர்மிலன், யதுஷன், அபிநந்தா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2023) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனகிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி,
உரும்பிராய் வீதி மேற்கு,
திருமூலர் யோக அறச்சாலை.

தகவல்:
குடும்பத்தினர்
077 844 6219



## விபத்தில் முதியவர் இறப்பு!

யாழ்ப்பாணம், நவ. 15

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்துக்குச் செல்லும் போது மல்லாகம் சந்தியில் பிறிதொரு மோட்டார்சைக்கிளுடன் மோதி ஏற்பட்ட விபத்தில் காயமடைந்த முதியவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். நாகரத்தினம் ஜெயருதாஸ் (வயது- 76) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். இறப்பு விசாரணைகளை யாழ். போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந. பிரேமகுமார் மேற்கொண்டார்.

(ம-26)


## மரண அறிவித்தல்



### சுப்பையா சண்முகரத்தினம்

வேலணையை பிறப்பிடமாகவும் நல்லூர் மற்றும் ஊர்காவற்றுறை கரம்பொன் தென்கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட இசைக் கலைஞர் சுப்பையா சண்முகரத்தினம் நேற்று (14.11.2023) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தனமுத்து சுப்பையாபிள்ளை (பல்லிசைக் கலைஞர்) மற்றும் சிவக்கொழுந்து தம்பதியரின் பாசமிகு மகனும், புஸ்பலீலாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பகவதி, இரத்தினாம்பாள் மற்றும் சண்முகவடிவு லோகாம்பாள், சரோஜாதேவி அருணாசலம் (அருணா இசைக்குழு இயக்குனர்), காலஞ்சென்ற சுதந்திரராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கணேசன் (இசையாளர்), கணேசசுந்தரம் (வில்லிசைக் கலைஞர்), ஜெயசிங்கம், தனேந்திரன் (ராங்கன் இசைக்குழு) மற்றும் விமலாதேவி, மாலா ஆகியோரின் அன்பு மைத்துனரும், கோகுலன் (ஊடகத்துறை பணியாளர் - தொகுப்பாளர்), தவகுலன், மீரா தவநிதி - சயந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், நேசமலர், தர்சன், அன்ரன் (அவுஸ்திரேலியா), பிரசாத் ஆகியோரின் மாமனாரும், சார்மி, அபிசன், சாருக்ஷன், சலோமி, கரிகாலன், சகானா, லோஜிதன், தனுஸ்கா, ஸாரிக்கா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2023) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கரம்பொன் தென்கிழக்கு ஊர்காவற்துறையில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக கரம்பொன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:
T.P: 077 3294 288

தகவல்:
மகன் - தவகுலன்.

(CS 26951)A-1


## உலக வங்கிக் குழுவினர் இலங்கைக்கு

உலக வங்கியின் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு வந்துள்ளது. எதிர்வரும் 5 வருடங்களில் இலங்கையில் சுகாதாரத்துறைக்கு எவ்வாறு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் ஆய்வு செய்யவே இந்தக் குழு இலங்கைக்கு வந்துள்ளது. எ-இ)


## பதினாறாம் ஆண்டு நினைவு அஞ்சலி



அன்னை மடியில் 20 . 07 . 1982

அரக்கனின் பிடியில் 11 . 11 . 2007

அமரர்

### பரமநாதன் ஜெயக்குமார் (ஜெயா)

**திதி:- துதியை (15.11.2023)**

எங்கள் அன்பின் ஜெயாவே!
எங்கள் ஆருயிர் செல்வமே ஜெயா,
தூக்கம் அற்ற இரவுகளாய் தொலைகிறது எங்கள் வாழ்க்கை ஜெயா,
விழிகள் கலைப்படைந்து கண்ணீரில் மிதக்கின்றது.
கனவான உன் ஆசைகளை நிஜமாக்கி என்றும் - உன்
நினைவுகளுடன் வாழ்கின்றோம்..
பதினாறு ஆண்டுகள் கடந்தாலும்
எம் இதயத்தில் வாழும் எங்கள் ஜெயாவின்
ஆத்மா சாந்திபெற கல்வளை பிள்ளையார் வீரபத்திரர்
காளி துணை வேண்டி பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தாவளை இயற்றாலை,
கொடிகாமம்.

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## குமாரன் குகதாஸன்

(உடுப்பிட்டி வடக்கு ஜே/353 கிராம அலுவலர்)

துன்னாலை கிழக்கை பிறப்பிடமாகவும், குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட குமாரன் குகதாஸன் நேற்று (14.11.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரன் மற்றும் தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், இராசையா காலஞ்சென்ற தவமணி தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற கௌரி (அபிவிருத்தி உத்தியோகத்தர்) மற்றும் மதிவதனி (மல்லாவி), சரஸ்வதி (துன்னாலை), கங்காதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிறேமலதாவின் அன்புக் கணவரும், ஜகதாரணனின் பாசமிகு தந்தையும், பிரபாகரன், பிரதீபன், தயாளன், லோஜினி, துசாயினி ஆகியோரின் மச்சானும், சங்கவி, கோபிநாத், சுருதிகா, அபிதா, டனுஷன், ஆசாகி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று இன்று (15.11.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குமாரசாமி வீதி,**
**புத்தூர் கிழக்கு,**

(cs 26946) (N.1)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



## கணராஜசிங்கம் சுலோஜனா

**(ஓய்வுநிலை ஆசிரியை)**

ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் ஹேகித் றோட், வத்தளையை வதிவிடமாகவும் கொண்ட கணராஜசிங்கம் சுலோஜனா கடந்த (11-11-2023) சனிக்கிழமை வத்தளையில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலிங்கம் இராசம்மா (ஓய்வு நிலை ஆசிரியர்) தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற கணராஜசிங்கத்தின் அன்பு மனைவியும், கோபிகா, கிருஷாந் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சகாஷ், எறிக் ஆகியோரின் அன்பு மாமியும், றேஷான் அவர்களின் அன்பு அப்பம்மாவும், மகேஸ்வரலிங்கம், தனேஸ்வரலிங்கம், சர்வேஸ்வரலிங்கம், கௌசலா, திரௌபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சீதாதேவி, யோகராணி, ராஜதேவி, சிதம்பரநாதன், ஞானேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற சசிகரன் மற்றும் தபோதினி - சிவறூபன், பிரபாகரன்- ருக்ஷி, ஜெகதினி - கார்த்தீபன், டினுஷன், கிருஷன், லதுஷன் ஆகியோரின் மாமியும், சுகத் - விதுஷா, நேருஷா- ராஜ்மோகன், கவிநாத், சஞ்சிகா, நிகேஷ்-கஸ்தூரி, நிரேஷ்-சுவேதா ஆகியோரின் பெரியம்மாவும், தருணி, திபிஷா, திபிக்ஷன், கபிலன், அருணன் ஆகியோரின் பேர்த்தியாரும், மற்றும் காலஞ்சென்ற சோமசுந்தரம் (ஓய்வு நிலை ஆசிரியரின்) மருமகளும், ஞானச்சந்திரன், சாரதாதேவி, விமலச்சந்திரன், மங்களாதேவி, செல்வகுமார், றோகினி ஆகியோரின் மைத்துனியும், செல்லம்மாவின் (ஓய்வு நிலை தாதி உத்தியோகத்தர்) பெறாமகளும், சுப்பையா - சுகந்தினி, சிவஞானசுந்தரம்-விமலினி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-11-2023) பிற்பகல் 2.00 மணிக்கு அவரது ஏழாலை இல்லத்தில் நடைபெற்று கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**ஏழாலை தெற்கு,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**சகோதரன் மகேஸ்வரலிங்கம்**

## வவுனியா வடக்கு பிரதேச சபை

## 2024.01.01 முதல் 2024.12.31 வரை மரக்கறி சந்தைகள், மீன் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் - 2024

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 2023.11.15 தொடக்கம் 2023.11.30 ஆம் திகதி பி.ப 1.50 வரை
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி : 2023.11.30 பிற்பகல் 02.00 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 2023.11.30 பிற்பகல் 02.05 மணி

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| தொ. இல | சந்தை | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்பு பணம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | நெடுங்கேணி கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 10,000.00 | 700,000.00 |
| 2 | கனகராயன்குளம் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 10,000.00 | 300,000.00 |
| 3 | புளியங்குளம் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 5,000.00 | 100,000.00 |
| 4 | நயினாமடு கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 5,000.00 | 50,000.00 |
| 5 | நெடுங்கேணி மாட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 10,000.00 | 1,500,000.00 |
| 6 | கனகராயன்குளம் மாட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 10,000.00 | 600,000.00 |
| 7 | நெடுங்கேணி ஆட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 5,000.00 | 200,000.00 |
| 8 | கனகராயன்குளம் ஆட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 5,000.00 | 200,000.00 |
| 9 | நெடுங்கேணி மீன் சந்தை | 2,000.00 | 10,000.00 | 300,000.00 |
| 10 | கனகராயன்குளம் மீன் சந்தை | 2,000.00 | 10,000.00 | 250,000.00 |
| 11 | புளியங்குளம் மரக்கறி சந்தை | 2,000.00 | 5,000.00 | 100,000.00 |
| 12 | நயினாமடு மரக்கறி சந்தை | 2,000.00 | 5,000.00 | 50,000.00 |

**கேள்வி நியந்தனைகள்:**

01. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி, இரண்டாம் பிரதி என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுவதோடு எதற்கான கேள்வி விண்ணப்பம் என்பதனையும் குறிப்பிட்டு "செயலாளர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரத்திற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்படுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்.
02. கேள்விதாரர் இலங்கைப்பிரஜையாக இருக்கவேண்டும் என்பதுடன் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
03. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராகக்" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் தெரியவரும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
04. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் பிரதேச செயலரால் விநியோகிக்கப்பட்ட குடும்ப அட்டை மற்றும் அதன் பிரதி என்பனவற்றையும் சமர்ப்பித்தல் வேண்டும். மூலப்பிரதிகள் மீள ஒப்படைக்கப்படும்.
05. தெரிவு செய்யப்படும் கடைகள், சந்தைகளுக்கான சித்தி தரக்கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பங்கு தொகையை எம்மால் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னதாக வைப்புத் தொகையாக செலுத்தி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மிகுதி 2/3 தொகையினை 2024.08.31 இற்கு முன்னர் மாதாந்தம் சம தொகைகளாக ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறுமிடத்து 10% தண்டப்பணம் அறவிடப்படும்.
06. தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு மேல் மாதாந்த குத்தகைத் தொகையினை செலுத்த தவறின் எதுவித அறிவித்தலும் இன்றி குத்தகை ஒப்பந்தம் இரத்துச்செய்யப்படுவதுடன் வைப்புத் தொகை மீளளிக்கப்படமாட்டாது.
07. கேள்வி விண்ணப்பம் சமர்ப்பித்து சித்தி பெற்ற கேள்விதாரர் குறிக்கப்பட்ட கால அவகாசத்தினுள் ஒப்பந்தம் மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் அவரது கேள்வி விண்ணப்பம் இரத்துச்செய்யப்படும். அத்துடன் எதிர்காலத்தில் அவர் கேள்வி விண்ணப்பங்களை சமர்ப்பிக்கமுடியாதவாறு கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்படுவார் என்பதோடு கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
08. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை எந்தவொரு காரணமும் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
09. கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புபணமும் மீளளிக்கப்படமாட்டாது.
10. கேள்வி அறிவித்தலுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைவாகவே கேள்விகளை அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரத்தில் கொடுக்கப்படும் விபரங்கள் உண்மையாகவும் சரியானவையாகவும் இருப்பதுடன் இவைகளை அத்தாட்சிப்படுத்தும் பொறுப்பும் கேள்விதாரரைச் சார்ந்தது ஆகும். கேள்விப்படிவங்களை தருவதற்கு முன்பும் அதற்கு பின்பும் நிபந்தனைக்குரிய அத்தாட்சியினை சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருப்பது அவசியமாகும்.
11. மரக்கறிச்சந்தை மண்டபத்தினை குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர், கொண்டுவரும் பொருட்களின் விற்பனைவிலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக்கூடாது அத்துடன் உற்பத்தியாளரிடமிருந்து 10% கழிவு பெறும் நடைமுறை முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.
12. சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற இறைச்சி, மீன் மற்றும் மரக்கறி போன்றன சுகாதாரமானதாக இருப்பதுடன் நியாயமான விலைக்கு பொதுமக்களுக்கு விற்பனை செய்வதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
13. குத்தகை தாரர் கடை, சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு தாங்கள் முழுப் பொறுப்பாளியாவீர்கள்.
14. சந்தைகளை குத்தகைக்கு பெறுபவர் வியாபாரிகள் கோருமிடத்து சந்தைப்பகுதியில் இடம் இருப்பின் நியாயமான வாடகைக்கு வழங்குதல் வேண்டும்
15. சந்தைச்சுற்றாடலில் இருந்து 0.5 Km (ஐநூறு மீற்றர்) சுற்றுவட்டாரத்தில் மரக்கறி, மீன், இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
16. உபகுத்தகைக்கு விடுவது தடைசெய்யப்பட்டுள்ளது என்பதுடன் குத்தகைக்கு எடுத்தவரே அலுவலக தொடர்பாடல்களை மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு தெரியவரின் குத்தகை ஒப்பந்தம் இரத்துச்செய்யப்படும்.
17. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாகவும் ஒப்பந்த சரத்துகளுக்கு அமைவாகவும் என்னால் காலத்திற்கு காலம் எழுத்துமூலம் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் ஒழுகுதல் வேண்டும்.
18. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
19. கேள்வி விண்ணப்பங்களை உரிய நேரத்திற்கு முன்னதாக சமர்ப்பிக்கத் தவறின் கேள்வி விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படுவதோடு கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
20. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டே கேள்வி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
21. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது 024-2030200 எனும் தொலைபேசி இலக்கத்தினை தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்

**திருமதி சோதிநாயகி மணிவண்ணன்,**
**செயலாளர்,**
**வவுனியா வடக்கு பிரதேச சபை,**
**நெடுங்கேணி.**

(விண்ணப்ப படிவங்களை 2023.11.15 தொடக்கம் 2023.11.29 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் முற்பகல் 9.00 தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரையும் 2023.11.30 ஆம் திகதி அன்று பிற்பகல் 1.50 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொருளாதார...

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு கோத்தாபய அரசாங்கமே பொறுப்பு என்று தீர்ப்பிடுமாறும் அவர்களிடம் இழப்பீட்டைக் கோரியும் தொடரப்பட்ட வழக்கு உயர் நீதிமன்றத்தில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.
இதன்போதே உயர் நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அடங்கிய குழுவினர் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளனர்.
அத்துடன் இவர்கள் அடிப்படை உரிமைகளையும் மீறியுள்ளனர் என்றும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.
எனினும் பிரதிவாதிகள் இழப்பீடுகளை வழங்கத் தேவையில்லை என்றும், ஆனால் மனுதாரருக்கு தலா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வழங்க வேண்டும் என்றும் நீதிமன்றம் அறிவித்தது.
பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான முர்து பெர்னாண்டோ, புவனெக அலுவிஹாரே, பிரியந்த ஜயவர்தன மற்றும் விஜித் மலல்கொட ஆகிய நீதிபதிகளே இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை வழங்கியுள்ளனர். (அ-ம)

### கனவுலக...

ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவால் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள பட்ஜெட் கனவுலக பட்ஜெட் என்று தெரிவித்துள்ளார் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஹரிணி அமரசூரிய.
நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் புரட்சிகரமானது என்று நிதி இராஜாங்க அமைச்சர் உட்பட ஆளும் தரப்பினர் புகழ்பாடுகிறார்கள். புரட்சிகரமானது என்றால் என்னவென்பதை முதலில் விளங்கிக்கொள்ளவேண்டும்.
2024ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டம் புரட்சிகரமானதல்ல. அது கனவு உலகத்தை அடிப்படையாகக் கொண்டது. புரட்சிகரமானது என்றால் சமூகக் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். கனவு உலகு முன்மொழிவுகள் ஒருபோதும் மாற்றத்தை ஏற்படுத்தாது.
வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வழங்கும் கலாசாரம் தற்போது கடைப்பிடிக்கப்படுகிறது. 2023ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்தகால தவறுகளைத் திருத்திக் கொள்ளவேண்டும் என்றார். கடந்த கால தவறுகளை திருத்திக் கொள்ளவேண்டும் என்று குறிப்பிடும் ஜனாதிபதி முதலில் உண்மைத்தன்மையுடன்செயற்படவேண்டும். தேசிய வளங்களை விற்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தை எதிர்ப்பது பெருங் குற்றம் என்று ஜனாதிபதி குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது.
கல்வித்துறை தொடர்பில் கனவுலகில் இருந்து முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பாடசாலைக் கல்விக் கட்டமைப்பு வீழ்ச்சியடைந்துள்ளால் உயர் கல்வி முறைமை பலவீனமடைந்துள்ளது. நாட்டில் உள்ள 17 அரச பல்கலைக்கழகங்களின் பிரச்சினைகள் நாளுக்கு நாள் தீவிரமடைந்துள்ளன. விரிவுரையாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறுகிறார்கள். கல்விகட்டமைப்பு முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு ஏதும் முன்வைக்கப்படவில்லை. மாறாகப் புதிதாக 4 பல்கலைக்கழகங்களை ஸ்தாபிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. ஊருக்கு ஊர் பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதால் கல்விக் கட்டமைப்பு மேம்படாது - என்றார். (அ-ம)

### பாதீட்டை...

ஐக்கிய மக்கள் சக்தியினர் வரவு - செலவுத்திட்டத்தை ஆதரிக்கத் தயாராகவுள்ளனர் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
2024ஆம் நிதியாண்டுக்காக முன்வைக்கப்பட்டுள்ள பாதீடு நாட்டுமக்களுக்கு நல்லதொரு வரப்பிரசாதமாகும். ஆதலால், ஐக்கிய மக்கள் சக்தியினர் பலர் பாதீட்டின் நன்மைகளைத் தெரிந்துள்ளனர். ஆனால், அவர்கள் பாதீட்டுக்கு ஆதரவைத் தெரிவிக்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் இடையூறு ஏற்படுத்துகின்றார். எதிர்க்கட்சித் தலைவர் தன் சுய அரசியல் தேவைகளுக்காக இவ்வாறு செயற்படுகின்றார் - என்றார். (அ-ம)

### 2024 பாதீட்டுக்கு...

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்கப்படும் என்று பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.
பொதுஜன பெரமுனவின் கலந்துரையாடலொன்று கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ச மற்றும் கட்சியின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ச ஆகியோரின் தலைமையில் பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது. வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மஹிந்தானந்த அளுத்கமகே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'எமது கட்சி அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியாகும். எனவே, பாதீட்டுக்கு ஆதரவு வழங்கப்படும். நாமல் ராஜபக்சவுக்கு மாறுபட்ட கருத்து இருக்கலாம். கடந்த வருடம் இந்த நாடு இருந்ததை மறந்துவிடக்கூடாது. வரிசை யுகம் ஏற்பட்டது. மக்களுக்கு உணவு இருக்கவில்லை. இவ்வாறானதொரு சூழ்நிலையில் சாதகமான பாதீடு முன்வைக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள யோசனைகள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்' - என்றார். (அ-ம-44)

### தேவைப்படுவது...

காணாமலாக்கப்பட்ட எங்களின் பிள்ளைகளுக்கு நீதியா அல்லது பொருளையோ ஒரு தடவையேனும் இந்த அரசாங்கத்திடம் கேட்கவில்லை. எமக்கு நிதியல்ல நீதியே வேண்டும் என்று வடமாகாண காணாமலாக்கப்பட்டோருக்கான சங்கங்களின் தலைவி ரஞ்சிதம் தெரிவித்தார்.
கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
காணாமலாக்கப்பட்ட எங்களின் பிள்ளைகளுக்கு, உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியே கடந்த 14 ஆண்டுகளாக நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம். மாறாக இழப்பீடுகளை எதிர்பார்த்தோ அல்லது இழப்பீடுகளைக் கோரியோ இந்தப் போராட்டம் நடத்தப்படவில்லை. எமது கோரிக்கைக்கு இதுவரை எந்தக் காத்திரமான பதிலும் கிடைக்கப்பெறவில்லை. எனவே சர்வதேசம் இது தொடர்பில் கவனம் செலுத்தி எமக்கு நல்லதொரு தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் - என்றார். (அ-ம-113)

### மூளைக்...

வடக்கு கிராமஅலுவலர் பிரிவில் கடமையாற்றி வந்த குமாரன் குகதாசன் (வயது - 48) என்ற கிராம அலுவலரே உயிரிழந்தவராவார்.
தீபாவளி தினமான நேற்றுமுன்தினம் அவர் திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார். அவர் உடனடியாக மீட்கப்பட்டு அச்சுவேலி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். பின் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். மூளைக் காய்ச்சலால்தான் இறப்புச் சம்பவித்துள்ளது என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. இறப்பு விசாரணைகளையாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-27)

### உருக்குலைந்த...

மொன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.
தரணிக்குளத்தின், நீரேந்து பகுதியில் சடலம் ஒன்று மிதப்பதாகப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய வே இந்த மீட்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. சடலத்தின் இரு கைகளும், இரு கால்களும் துண்டிக்கப்பட்டுள்ளன. ஆதலால், இது கொலையாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ-ம-110)

### சட்டவிரோதக்...

13 வயதான சிறுமியொருவர், அவருடைய தாயின் இரண்டாவது கணவனால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அந்தச் சிறுமி கர்ப்பம் தரித்துள்ளார். இதையடுத்து அந்தச் சிறுமியை முல்லைத்தீவு மருத்துவமனைக்கு அருகிலுள்ள மருந்தகம் ஒன்றில் சட்டவிரோத கருக்கலைப்புக்கு உட்படுத்தியுள்ளனர். கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. எனினும் இந்த விடயம் தற்போதே வெளியில் தெரியவந்துள்ளது. இதனையடுத்து சிறுமியின் உறவினர்களால் பொலிஸாரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய நபர் (தாயின் இரண்டாவது கணவன்), கருக்கலைப்பு உடந்தையாக இருந்த சிறுமியின் தாயார் மற்றும் மருந்தகத்தின் உரிமையாளர் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-19)

### 93 குளங்கள்...

15 குளங்கள் உடைப்பெடுத்துள்ளதாக கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.
தொடர் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால், வவுனியாவில் உள்ள பல குளங்களும் தற்போது நிரம்பி வருகின்றன. இந்த நிலையில் 93 குளங்கள் தற்போது வான்பாய ஆரம்பித்துள்ளன. இதைவிட 15 சிறு குளங்கள் உடைப்பெடுத்த நிலையில் அவை தற்போது சீரமைக்கப்பட்டுள்ளன. (அ-ம-110-18)

### துப்பாக்கி...

துப்பாக்கி ரவைகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.
நெடுந்தீவு பொலிஸ் விசேட படையணியினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் 15ஆம் வட்டாரப் பகுதியில் முன்னெடுத்த சோதனை நடவடிக்கைகளையடுத்தே இந்தத் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-125)

### தொடர்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தொடர் மழை காரணமாக, யாழ்ப்பாணத்தில் எட்டுக் குடும்பங்களைச் சேர்ந்த 31பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/388 கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவரும், அதே பிரதேச செயலர் பிரிவில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் 7 குடும்பங்களைச் சேர்ந்த 28 பேரும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளனர். மழை காரணமாக தற்போதுவரை யாழ்ப்பாணத்தில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 31பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இதேவேளை- யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் 43.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் 897.7 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. (அ-ம-27)

### இளைஞன்...

நிலக்சன் (வயது -18) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். மரண விசாரணைகளையாழ்.போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு - செலவுத் திட்டத்தில் நிவாரணம் கிட்டவில்லை!

### வாகன இறக்குமதியாளர் சங்கம் அதிருப்தி

கொழும்பு, நவ.15

வரவு - செலவுத் திட்டத்தில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு எவ்வித நிவாரணமும் வழங்கப் படவில்லை என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டின் டொலர் கையிருப்பு ஓரளவு அதிகரித்துள்ள நிலையில், வாகனங்களை இறக்குமதி செய்வதற்குத் தேவையான வசதிகளை மேற்கொள்ளவேண்டும் என்று மத்திய வங்கி ஆளுநர் மற்றும் நிதி அமைச்சிடம் பல்வேறு சந்தர்ப்பங்களின்போது கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த முறை வரவு - செலவுத் திட்டத்தில் வாகன இறக்குமதிக்கான தடை தளர்த்தப்படும் என வாகன இறக்குமதியாளர்கள் எதிர்பார்த்தபோதும் தமக்கு எவ்வித நிவாரணமும் கிடைக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த நான்கு வருடங்களாக வாகனங்கள் இறக்குமதி செய்யப்படாமையால் பாவனையாளர்கள் மற்றும் வாகன இறக்குமதியாளர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனால் சுமார் 4 இலட்சம் பேர் வேலையிழந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரவு - செலவுத் திட்டத்துக்குப் பின்னர் அல்லது கட்டுப்பாடுகளுடன் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கவேண்டும் என்றும் இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் செயலாளர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள் ளார். (எ-இ)


**பணிநிலை வேண்டுகை**

யாழ் நகரில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு காசாளர் தேவை. யாழ் நகரிற்கு அருகாமையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

வேலுப்பிள்ளை & சன்ஸ்

இல, 243 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

075 240 7976

**கணினி தட்டெழுத்தாளர் தேவை**

சாவகச்சேரி நகரில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு கணினி தட்டெழுத்தாளர் தேவை.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

076 573 4507


## பாராட்டி வாழ்த்துகிறோம்



கடந்த (13.11.2023) திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதவான் D.S.சூசைதாஸ் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாகப் பதவியேற்ற

**திருமதி குணரத்தினம் ரஞ்சிதாதேவி**

அவர்களின் சேவை சிறக்கப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
உற்றார், உறவினர், நண்பர்கள்.

(CS 26953)A-1

# மரண அறிவித்தல்



## வல்லிபுரம் கனகரத்தினம்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 12.12.1953 | 13.11.2023 |

கோண்டாவில் கிழக்கு குமரகோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கனகரத்தினம் கடந்த (13.11.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் இராசம்மா தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான அப்பையா பாக்கியம் தம்பதியரின் மருமகனும், நவரத்தினராசா (கனடா), மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், தவனேந்திரன், பிரசன்னா (கனடா), காலஞ்சென்ற தர்மிளா மற்றும் பிரதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவானி, தேவிகா (கனடா), காலஞ்சென்ற சிவனேசன் மற்றும் சுதா ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிசன், அபீனன், அன்ஸிகா (கனடா), அனிலிஷா (கனடா), சிந்தூரி, கவீனா, ஆராதனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2023) புதன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குமரகோட்டம், கோண்டாவில்.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 26848) A-1



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.